# வதைக்கப்படும் மக்களும் புதைக்கப்படும் உரிமைகளும்



கோவிந்த முகோத்தி

# வதைக்கப்படும் மக்களும் புதைக்கப்படும் உரிமைகளும்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

*கோவிந்த முகோத்தி*

**கீழைக்காற்று வெளியீட்டகம்**
10, ஔலியா சாகிப் தெரு,
எல்லீசு சாலை, சென்னை - 600 002.

முதல் பதிப்பு : செப்டம்பர், 1994

உரிமை
தமிழாக்கம் : கீழைக்காற்று வெளியீட்டகம்

வெளியீடு : கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, ஔலியா சாகிப் தெரு,
எல்லீசு சாலை, சென்னை-2.

அச்சு : எழில் பிரிண்ட்ஸ்,
321, ஆற்காடு ரோடு,
கோடம்பாக்கம், சென்னை-24.

விலை : 7.00

## — பதிப்புரை —

மக்களது ஜனநாயக உரிமைகளுக்காக போராடிவரும் திரு. கோவிந்த முகோத்தியின் இக்கட்டுரை எகானமிக் அண்ட் பொலிடிகல் வீக்லி என்ற ஆங்கில ஏட்டில், மே 21, 1994-ம் ஆண்டு இதழில் (பக்கங்கள் 1259 - 1263) வெளியாகியது. அதனுடைய தமிழ் மொழி பெயர்ப்பே இவ் வெளியீடு. நாடு முழுவதும் போலீசும் இராணுவமும் எவ்வாறு கசாப்பு நிறுவனங்களாக, ''மனிதக்கறி'' போட்டு வளர்க்கப்படும் மிருகங்களாக, வக்கிரம் நிறைந்தனவாக விளங்குகின்றன் என்பதற்கான ஆதாரங்களை அளிக்கிறது. அதே சமயம் வதைகளுக்கு எதிரான சட்டங்களும் இந்தியா ஏற்றுக் கொள்ளும் சர்வதேச பிரகடனங்களும் நாளும் அற்பமாக காலில் போட்டு மிதிக்கப்படுகின்றன என்பதையும் எடுத்துக் கூறுகிறது.

நீதிமன்றங்களின் பாராமுகமும் ஆட்சியாளர்களின் திடலடி மறுப்பும் இத்தகைய இழிநிலையை மேலும் தீவிரமாக்குவதைச் சுட்டிக் காட்டுகிறது.

உரிமைகளுக்காக போராடுபவர்களை மட்டுமல்ல, ஒன்றுமறியாத சாதாரண மக்களையும் வாட்டி வதைக்கும் அரசு பயங்கரவாதத்தை ஆதாரங்களுடன் நிரூபிக்கிறது இக்கட்டுரை. அரசும், அதன் அமைப்புகளும் தானே வரையறுத்துள்ள சட்டப்பூர்வ மனித உரிமைகளைக் கூட அற்பமாய் நினைக்கும் கொலைக்கருவியாக மாறியுள்ளன என்பதற்கு இது ஓர் இரத்த சாட்சி.

எழுச்சியுறும் மக்களது போராட்டங்களினால் சொந்த நாட்டு மக்களையே 'சந்தேக கேசுகளாக' கண்காணிப்பதும், கண்மூடித்தனமாய் வதைப்பதும் அரசின் அன்றாட அலுவல்களாக ஆகிவிட்டன. மக்களை வதைப்பதிலும், பாலியல் வக்கிரத்திலும் இதர மாநிலங்களின் போலீசுக்கோ, துணை இராணுவப் படைக்கோ குறைந்தவர்கள் அல்ல என மார்தட்டுகிறது தமிழக காவல்துறை. ஜெயலலிதா ஆட்சியின் நல்லாசியுடன்

நடந்தேறும் மக்கள் மீதான கொடுமைகளையும் இந்நூலில் தொகுத்தளித்துள்ளோம். இத்தகைய அம்பலப்படுத்தல்களும், இவைகளை மக்களுக்கு அறியச் செய்வதும் நமது ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தின் முதற்தேவை எனுமடிப்படையில் வெளியிடப்படும் இந்நூலை படித்தும், பரப்பியும் ஆதரிக்க வேண்டுகிறோம்.

*கீழைக்காற்று*
*செப்டம்பர், 1994*

*கவுரமான குடும்பத் தலைவருக்கு*
*வதைத்தொழில்*
*முதலில் குமட்டுகிறது.*
*இயந்திரகதியில் அதுவே*
*கவுரவமான தொழிலாகிறது.*
*இரத்தக் கவுலடிக்கும் கைகளுடன்*
*குடும்பத்தில் கொஞ்சி மகிழ*
*அவர்களால் முடிகிறது.*
*எந்திரங்களுக்கேது மனசாட்சி?*
*அதுவும் அரசு எந்திரங்களுக்கு,*

*ஆசனவாயைக் கிழித்து*
*அங்கங்களைப் பிழிந்து*
*தேடுதல் வேட்டையின் திறன்காட்டி*
*'முதல்தாரமாய்'*
*முன்னேறுகிறார்கள்.*

# வதைக்கப்படும் மக்களும் புதைக்கப்படும் உரிமைகளும்



''போலீசு நிலையத்துக்கு அருகில் குடியிருப்பவர்கள் போலீசு காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் அலறல்களை அடிக்கடி கேட்டே தீருவர். அங்கு காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாக மறுநாள் பத்திரிக்கையில் படிப்பார்கள்'' என்கிறது மக்கள் ஜனநாயக உரிமைப் பாதுகாப்புக் கழக அறிக்கை. இத்தகு நிகழ்ச்சிகள் விதிவிலக்கானவையா? அல்லது வழமையானவையா? ''ஒரு நாகரிக நாட்டில் போலீசு காவலில் ஒரு கொலைக் கூட நடைபெறக் கூடாது'' என்று அக்டோபர் 10, 1987-ல் மேற்கு வங்க முதல்வர் ஜோதி பாசு பிரகடனம் செய்தார்.

மறைந்த இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி ஜனவரி 1988-ல் பிரிட்டிஷ் தொலைக் காட்சி நிறுவன பனோரமாவுக்கு பேட்டி அளித்தார். ''நாங்கள் யாரையும் வதை செய்யவில்லை. இதை நான் உறுதியாகக் கூற முடியும். வதைகள் பற்றிய புகார்கள் எழும்போதெல்லாம் சோதித்தறிந்து, அவை உண்மையல்ல என்று நாங்கள் கண்டறிந்து உள்ளோம்'' என்று அப்போது அவர் பிரகடனம் செய்தார்.

'நாகரிக' அரசாங்க ஆளுகைக்கு உட்பட்ட மேற்கு வங்க மாநிலத்தில், 1977-க்கும் 1989-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில், காவல் நிலைய வதைகளால், 82 பேர் கொல்லப்பட்டதாக மக்கள் ஜனநாயக உரிமைப் பாதுகாப்புக் கழக அறிக்கை குற்றஞ்

சாட்டுகிறது. வதைகளில் கொல்லப்பட்டவர்களின் பெயர்கள், அவை நிகழ்ந்த 'காவல்' நிலையங்கள், கொலைகள் நடந்த நாட்கள் ஆகியவற்றை இவ்வறிக்கை குறிப்பிடுகிறது. இவ்வாறுதான் ''கிழக்கெல்லையில் எல்லாமே நல்ல படியாக'' இருக்கிறது.

பம்பாயில், 1982-க்கும் 1989-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில், 8 முதல் 12 வரையிலான காவல் நிலையக் கொலைகள் நடந்துள்ளன. இதே காலத்தில் டெல்லி நகரில் 48 பேரும் ஆந்திர மாநிலத்தில் 118 பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜூன் 26, 1989-ல் டெல்லியில் உள்ள ஷாலிமார் பாக் - கில், திருடியதாக குற்றம் சாட்டி சிறுவர்களைக் கைது செய்தனர். இவர்கள் 6 முதல் 12 வயதுள்ள சின்னஞ் சிறுவர்கள். இவர்களின் ஆடைகளைக் களைந்து அடித்து நொறுக்கி சிகரெட் முனைகளால் சுட்டுள்ளனர் போலீசார்.

**''தேடுதல்வேட்டை''களில் வதைமுறைகள்:**

செப்டம்பர் 1991-ல், அஸ்ஸாமில் மேற்கொள்ளப்பட்டது காண்டாமிருக நடவடிக்கை எனப் பொருள் படும் ''ஆப்பரேசன் ரினோ''. இந்த இராணுவ நடவடிக்கை மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசு பயங்கரவாதம் நிறைந்ததாகும். அது பற்றிய அறிக்கை பின்வரும் உண்மை விவரங்களைக் கூறுகிறது:

''வீடுகளிலான தேடுதல் வேட்டையின் போது, ஆண்கள் அனைவரும், தூங்கிக் கொண்டிருந்தவர்கள் உட்பட, இழுத்து வரப்பட்டனர். வீட்டிலேயே அவர்கள் முரட்டுத்தனமாக உதைக்கப்பட்டனர். இராணுவத்தினர் பெண்களை வைதனர், கன்னத்தில் அறைந்தனர். சிலரை துப்பாக்கி அடிக்கட்டையால் அடித்தனர்; பாலியல் ரீதியிலான அவமதிப்புகளுக்கும் உள்ளாக்கினர். வயது வேறுபாடு இன்றி ஆகமிகப் பெரும்பான்மையினரான ஆண்கள், குறிப்பாக இளைஞர்கள், கைது செய்யப்பட்டனர்.

''இவர்களை இரு விசாரணை முகாம்களுக்கு ஓட்டிச்சென்றனர். ஒன்று உள்ளூர் பள்ளித் திடலில் அமைந்தது; மற்றொன்று ஊரிலிருந்து 2.5 கிலோ மீட்டர் தொலைவில் ரிசர்வ் காட்டில் காகர் ஆற்றுக் கரையில் அமைந்தது. இந்த முகாம்களுக்குச் செல்லும் வழியிலேயே ஆகப் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் உதைக்கப்பட்டனர். சகதியும் சதுப்புமான பகுதிகளில் தம்மை முதுகில் சுமந்து செல்லும்படி படைவீரர்கள் அவர்களைக் கட்டாயப் படுத்தினர். மனிதக் குதிரைகளின் மீது சவாரி சென்ற போது கூட, படையினர் தம்மை சுமந்து சென்றவர்களை, இடைவிடாது உதைத்தனர். இந்த நடவடிக்கைக்குப் பொறுப்பான மேஜர் அவ்வூரின் மதிப்புக்குரிய முதிய ஆசிரியரின் முதுகின் மீது சவாரி செய்தார்.

''முகாம்களில் மக்கள் அவமதிக்கப்பட்டு பல்வேறு முறைகளில் தண்டிக்கப்பட்டனர்:

— முழந்தாளிட்டபடி சூரியனை நோக்கிப் பல மணி நேரம் நிறுத்தப்பட்டனர்.

— வட்டமிட்டபடி ஓடச் செய்வது அல்லது தவளைபோல் குதிக்கச் செய்வதன் மூலம் களைத்து விழச் செய்தனர்.

— அவர்களுக்கு உணவும் குடிநீரும் தரப்படவில்லை, அடி, உதை, சவுக்கடி போன்றவை அவ்வப்போதும் குறிப்பாக களைத்து விழும்போதும் செய்யப்பட்டன: இத்தகைய அவமதிப்புகளுக்கும் தண்டனைகளுக்கும் உட்படுத்தப்பட்ட போது உணவும் குடிநீரும் கூட வழங்கப்படவில்லை. விசாரணை முகாம்களிலும், வீடுகளில் தேடுதலின்போதும் அவர்களிடம் அடிக்கடி ''உல்பா எங்கே?'' என்று கேட்டனர். விசாரணையின் போதும் எழுத்து பூர்வமாக எழுதித் தரும்படி கேட்டபோதும் தெளிவான விஷயம் இதுதான்: இராணுவ வேட்டையின் நோக்கம் போராளிகளைப் பிடிப்பதோ, உபயோகமான தகவல்களைப்

பெறுவதோ அல்ல; கிராமத்தவர்கள் அனைவரையும் பீதி யூட்டுவதும், குருட்டாம் போக்கில் ஏதாவது தகவல்கள் அறிவதும் தான்.

''கிராமத்தவர்கள் விசாரிக்கப் படுகையில் அவர்கள் அடுத் தடுத்து ஈவிரக்கமற்ற முறைகளில் குண்டாந்தடிகள் மற்றும் துப் பாக்கி கட்டைகளால் புடைக்கப்பட்டனர்; சவுக்காலடிக்கப்பட் டனர்; தரையில் தள்ளி மிதித்து துவைக்கப்பட்டனர். சிலர் ஆடைகள் களையப்பட்டு மின் அதிர்ச்சிகளுக்கு உள்ளாக்கப் பட்டனர்; சிலரது பிறப்பு உறுப்புகளிலும் மின்சாரம் பாய்ச்சப் பட்டது. தலை முடி கொத்து கொத்தாக பிடுங்கப்பட்டது. சிலர் கூண்டுகளில் நெருக்கமாக அடைக்கப்பட்டு பூட்டப்பட்டனர். காகர் ஆற்றுக் கரையில் அமைந்த விசாரணை முகாம் ஒரு நர கமே என கிராமத்தவர்கள் சித்தரித்தனர்; சபிக்கப்பட்டவர்க ளின் கூக்குரல்களும் வதைப்பவர்களின் ஏச்சுக்களும், வசவுக ளும் அங்கு தொடர்ந்து ஒலித்தன.

''பெருமெடுப்பிலான விசாரணைகள் மற்றும் தேடல்க ளின் மூலம் ராணுவம் ஒரே ஒரு போராளியைக் கூட பிடிக்க வில்லை என்பது கவனத்திற்குரியதாகும். விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களில் மிகப் பெரும்பான்மையி னர் மாலை அல்லது இரவில் விடுவிக்கப்பட்டனர்.

''விசாரணை மற்றும் வதைகளின் முறைகள் மிகவும் பீதி யூட்டுபவை. இம்முறைகள் விசாரணைக்கு என்று கடைபிடிப்ப தாக மட்டுமிராமல் மனம்போன படி வதைப்பதற்கென்றே கடைபிடிக்கப்பட்டன. ஏனெனில் மிகப் பெரும்பாலோர் முறையாக விசாரிக்கப்படவில்லை; ஆனால் விதிவிலக்கின்றி அனைவரும் வதைக்கப்பட்டனர். வதைப்பதே தனி நோக்க மாகி, வக்கிர வெறியே மேலோங்கி உள்ளது. அப்பட்டமான பயங்கரவாதத்தை தோற்றுவிப்பதற்கான கருவியாகவே இம்மு றைகள் கடைபிடிக்கப்படுகின்றன.

கடைபிடிக்கப்படும் வதை முறைகள் பின்வருமாறு உள்ளன:

**அடித்தல்:**

*பொது இடத்தில் மற்றவர்கள் முன்னிலையிலும், வீட்டில் குடும்ப உறுப்பினர்கள் முன்னிலையிலும், படை முகாம்களிலும் கைகளாலும், குண்டாந் தடிகளாலும், துப்பாக்கி கட்டைகளாலும், சவுக்காலும் அடித்தல்.*

— *முகத்திலும் தலையிலும் அடிவயிற்றிலும் கைகளால் சரமாரியாக ஓங்கிக் குத்துவது.*

— *மார்பிலும், அடி வயிற்றிலும், முதுகிலும் கால்களால் உதைப்பது.*

— *கீழே தள்ளி உதைத்து மிதித்து எழ இயலாதவாறு செய்வது.*

— *பாதங்களில் குண்டாந்தடியால் அடித்தல்.*

**தொங்கவிடுதல்:**

— *கைகளைக் கட்டி உத்திரத்திலிருந்து தொங்கவிடுதல்:*

— *தலை கீழாகக் கட்டி மரத்திலிருந்து தொங்கவிடுதல்.*

— *ஒரு கையை மட்டும் கட்டி உயரத்திலிருந்து தொங்க விடுதல்; மற்றொரு கையை முதுகில் பிணைத்துக் கட்டுதல்.*

— *இவ்வாறு தொங்க விட்ட பின் ஈவிரக்கமற்ற முறையில் அடித்தல் அல்லது வேறு வகைகளிலான வதைகளை நிறைவேற்றுதல்.*

**நீர் மூழ்கி முறை:**

— *நீர் நிறைந்த வாளி அல்லது தண்ணீர் தொட்டியில் தலையை மூழ்க வைத்து திக்கு முக்காடி மூர்ச்சிக்க வைத்தல்.*

**தொடர்ச்சியாக நீர் ஊற்றுவது:**

— *அசைய முடியாதவாறு கை கால்களைக் கட்டி வாய், மூக்கின் மீது தொடர்ச்சியாக நீரை ஊற்றி திக்குமுக்காடச் செய்தல்.*

முளையடித்து கிடத்துதல்:

— தரையில் புதைத்த முளைகளில் கை கால்களைக் கட்டி, ஒரு கழுகு பரப்பிக் கொண்டு இருப்பது போன்று தரையில் மல்லாந்து அல்லது கவிழ்த்து கிடத்துதல். இதன் மூலம் எந்த அசைவும் இயலாமற் போய் விடுகிறது. அதன் பின் னர் அடித்தல், பூட்சு காலால் உதைத்தல் அல்லது மிதித்து துவைத்தல் அல்லது வேறு வகையான வதைகளைச் செய் தல். சில நேரங்களில் இரண்டு படையினர் ஒருவனது முது கில் குண்டாந் தடியை வைத்து பலங் கொண்ட மட்டும் அழுத்தி உருட்டுதல்; இதன் மூலம் கடும் வலியுடன் இரத்த வாந்தியெடுக்கவும் குடலிலிருந்து மலம் வெளியேறவும் செய்தல்.



பிணைத்து வைத்தல்:

— ஒரு முளை அல்லது கூடாரக் கம்புடன் வசதியாக இல்லாத வாறு உட்கார்ந்த நிலையில் பிணைக்கப்பட்டு மணிக் கணக்கில், சில நாட்கள் கூட, இருத்தி வைக்கப்படுதல்.

சட்டத்தில் பிணைத்தல்:

— செங்குத்தாக நிறுத்தப்பட்ட செவ்வக வடிவிலான சட்டத் துடன் ஒரு கழுகு பரப்பி இருப்பதைப் போன்ற நிலையில்

கட்டி வைத்து, அசைய முடியாமல் செய்து வதைக்கப்படுதல்.

**மின் அதிர்ச்சி கொடுத்தல்:**

— 12 வோல்ட் கார் பேட்டரி அல்லது நேரடியாக வீட்டு உபயோகத்திற்கு தரப்படுவதிலிருந்து, மின் தொடர்பு ஏற்படுத்தி, மின் அதிர்ச்சி கொடுத்தல். தலை, கண்கள், கன்னங்கள், காது, பிடரி, தோள்கள், அக்குள், முதுகு, ஏன் மறைவிடங்களிலும் கூட மின் அதிர்ச்சி கொடுத்தல்.

— தலை, கண் புருவம், அக்குள், மறைவிடங்களில் உள்ள முடியை குறடுகளால் பிடுங்குதல்.



— ஒருவனை அவனது பிறப்புறுப்பிலும் விதையிலும் தாக்கி வலியின் காரணமாக உணர்விழக்கச் செய்தல்.

— கைகளை முதுகில் பிணைத்துக் கட்டி விட்டு கண்களிலும் ஆசன வாயிலும் மிளகாய் பொடியைத் திணித்தல்.

— இரு படையினர் இரு கால்களையும் எதிரெதிர் திசையில் இழுத்து, ஆசனவாயைக் கிழித்தல்.

— ஒரு தடியை பெட்ரோலில் நனைத்து மிளகாய் பொடி தூவி அதை ஆசன வாயில் நுழைத்தல்.

— பற்ற வைத்த சிகரெட் தீ முனையினால் சூடு வைத்தல். மறைவிடங்களிலும் இவ்வாறே சூடு வைத்தல்.

— உடல் முழுக்க குண்டூசிகளைக் குத்தி வைத்தல்.

— கழுத்து வரை மண்ணில் புதைத்து விட்டு தலை மீது வாளியைக் கவிழ்த்து வைத்தல்.

— பலநாட்கள் தொடர்ச்சியாக உணவும் நீரும் தராமல் மறுத்தல்.

— அடுத்து பெருமளவிலான தண்டனைகள் மற்றும் அவமதிப்புகள். பெரு எண்ணிக்கையிலானவர்கள் இவற்றுக்கு உட்படுத்தப்படுகின்றனர். மக்கள் வயல்வெளியில் அல்லது முகாம்களில் வரிசையாக, சில சமயங்களில் பெண்களின் முன், நிறுத்தப்பட்டு பின் வருபவற்றைச் செய்ய கட்டாயப் படுத்தப்படுகின்றனர்.

- ☐ சூரியனை நோக்கி பல மணி நேரம் முழங்காளிட்டு நிற்க வைக்கப்படுதல்.
- ☐ வெய்யிலிலும் மழையிலும் நிர்வாணமாக நிறுத்தப்படுதல்.
- ☐ இடுப்பளவு அல்லது கழுத்தளவு நீரில் பல மணி நேரம் நிற்க வைக்கப்படுதல்.
- ☐ களைத்துப் போகும் வரை தவளை போல் குதிக்கச் செய்தல்.
- ☐ வட்டமான வடிவில் ஓடிக் கொண்டே இருத்தல்.
- ☐ படைவீரர்களை நீண்ட தூரத்துக்கு முதுகில் சுமந்து செல்லுதல்.
- ☐ தோப்புக் கரணம் போட வைத்தல்.
- ☐ கட்டாயப்படுத்தி மணல், மண்ணை உண்ணச் செய்தல் அல்லது சாராயம், அசுத்தமான நீரைக் குடிக்கச் செய்தல்.

''இந்நடவடிக்கைளின் போது படையினர் கேவலமான, நாக்கூசும் சொற்களையே பாவிக்கின்றனர். எந்த நேரமும், குறிப்பாக இரவு நேரங்களில், படைவீரர்கள் போதையில்தான் உள்ளனர்.

''தாக்குதல் மற்றும் தேடுதல் நடவடிக்கைகளின் போது பெண்களிடம் கேவலமாக நடந்து கொள்ளுகின்றனர். மிகவும் அற்பமான காரணங்களுக்காக அவர்கள் பெண்களின் மீது கையை போடுகின்றனர், கையைப் பிடித்து இழுக்கின்றனர், உடைகளைப் பிடித்து இழுக்கின்றனர், சில சந்தர்ப்பங்களில் நிர்வாணமாக்குகின்றனர். பாலியல் ரீதியில் அவமதிப்பது அல்லது அவமதிக்க முயற்சிப்பது அன்றாட நிகழ்ச்சி. ஆபாசமான சொற்களால் அர்ச்சிப்பது — இது பற்றி பெண்கள் புகார் செய்யாத அளவுக்கு — மிகவும் சகஜமாகி விட்டது.

''பாலியல் பலாத்கார நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. இவற்றுக்கு உள்ளானவர்கள், அதை வெளிப்படுத்தினால் அவர்களுக்கு ஏற்படும் (சமூக) அவமதிப்புகளுக்கு அஞ்சுவதால், பெருமளவிலான நிகழ்ச்சிகள் வெளிப்படாமலே போயுள்ளன. இரு பெண்களை அவர்களது வீட்டில் அடைத்து வைத்து இரவு தோறும் படைவீரர்கள் கும்பலாக பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்ட கொடூர சம்பவம் பற்றியும் தகவல்கள் வெளிப்பட்டு உள்ளன. சிறுவர்களும் கூட வக்கிரமான பாலியல் பலாத்காரத்துக்கு தப்பவில்லை.

''நாம் வரிசைப்படுத்திக் காட்டியுள்ள குருதியை உறைய வைக்கும் வதைகளின் முறைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டவர்களுடனான பேட்டிகள், ஒப்பமிட்ட அறிக்கைகள் ஆகியவற்றின் தொகுப்பே. இன்னும் பல்வேறு வதைகளின் முறைகள் இங்கு சேர்க்கப்படவில்லை; ஏனெனில் அது பற்றிய அறிக்கைகள் நம் கைவசமில்லை. படையினரால் நிறைவேற்றப்பட்டு சட்ட விரோதக் காவலிலும், விசாரணைகளிலும் உண்மையில் நடப்பவை என்ன என்பதற்கு நாம் பட்டியலிட்டு உள்ளவை மட்டுமே போதுமானவை.



''இத்தகைய விசாரணைகளின் போது அவர்களின் கண்கள் இறுக கட்டப்படுகின்றன; வதை செய்பவர்கள் யாரென அடையாளம் காட்ட இயலாதபடி செய்வதே இதன் நோக்கம். பரவலான மனிதாபிமானமற்ற வதைகளின் பாரிய விளைவுகள்:

- வதைக்கப்படுபவர்கள் தமது மன-சம நிலையை இழந்து விடுகின்றனர்; தூக்கமின்மைக்கு ஆட்பட்டு மனபேதலிப்புக்கு உள்ளாகின்றனர்.
- தலையில் மின் அதிர்ச்சி தரப்படுபவர்கள் தீவிரமான தலைவலி, நினைவாற்றல் இழத்தல், சிந்தனையும் செயலும் ஒத்திசையாதது, பார்வைக் கோளாறுகள் இன்னும் இது போன்ற பல்வகை அசாதாரண நோய்க் குறிகளுக்கு உள்ளாகின்றனர்.
- உதைத்தல், மிதித்து துவைக்கப்படுதல், லத்திகளால் அடிக்கப்படுதல் போன்ற உடல் ரீதியிலான வதைகளுக்கு உட்படுபவர்கள் தீவிரமான தசை பிடிப்பு, மூட்டு வலி, இரத்த வாந்தி, கருநிற மலம் கழித்தல், சிறுநீரில் ரத்தம் வருதல், கை கால்கள் விரல்களை இயக்க இயலாமல் போதல், மூட்டு கழண்டு போதல், பல்வகை நரம்புக் கோளாறுகள் ஆகியவற்றுக்கு ஆளாகின்றனர்.
- பிறப்பு உறுப்புகளில் தாக்கப்படுகின்றவர்கள் உணர்விழத்தல், மலட்டுத்தனம் இன்னும் இயல்புக்கு மாறான பல்வேறு பாலியல் குறைபாடுகளுக்கு உள்ளாகின்றனர்.

''இதில் உள்ள மிகப் பெரிய சோகம் என்னவெனில், இவ் வதைகள் அனைத்தும் அப்பாவி மக்களிடத்திலான விசாரணைகளே; பெருமளவில் இவை பொருளற்றவையாகவும் பயனற்றவையாகவும் உள்ளன. ஏனெனில் இவற்றின் விளைவாக போராளிகள் பெருமளவில் கைது செய்யப்படுவதற்கோ அல்லது தேடுதல் வேட்டையில் ஒரு உடைப்பை ஏற்படுத்துவதற்கோ உதவவில்லை; மக்கள் திரளினரை அரசுடன் முரண்டு பிடிப்பவர்களாக்குகிறது, கலகக்காரர்களாக்குகிறது, அரசிடமிருந்து விலகிப் போகச்செய்கிறது; இதுவே எதிர்கால வன்முறைகளுக்கு உரமூட்டியும் விடுகிறது.''

முன்னூறுக்கு மேற்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்ட வதைக் கொடுமை முறைகள் பற்றி அஸ்ஸாமில் 1991-ல் 'காண் டாமிருக' நடவடிக்கையின் போது மனித உரிமைகள் மீறல், மற்றும் அரசு பயங்கரவாதம் குறித்த அறிக்கை மேற்குறிப்பிட்ட வாறு கூறுகிறது.

## சிறைக் கொட்டடியில் வதைமுறைகள்

'கொட்டடி வதைகள், பாலியல் பலாத்காரங்கள் மற்றும் சாவுகள்' 1992 என்ற தலைப்பில் உலகப் பொது மன்னிப்பு அமைப்பு அறிக்கை கூறுவதாவது:

> ''இந்தியாவின் 25 மாநிலங்களில் - அவர்கள் போலீசு, படைவீரர்கள், அரை-இராணுவம் என யாரால் கைது செய்யப்பட்டாலும் - வதை என்பது எங்கும் விரவியதாக வும், வழமையானதாகவும் உள்ளது. அதிகாரத்தில் உள்ள கட்சியின் கொள்கை எதுவாக இருந்தாலும் நடப்பதென் னவோ இதே கதைதான். கடந்த பத்தாண்டில் ஆயிரக்க ணக்கில் இல்லாவிட்டாலும் நூற்றுக்கணக்கானவர்கள் வதைகளால் கொல்லப்பட்டனர்''.

''வதைகளுக்கு இலக்காகின்றவர்களில் பலர் குற்றவியல் விசாரணை தொடர்பாகவே கைது செய்யப்படுகின்றனர்; தக வல்களுக்காகவும் ஒப்புதல் வாக்குமூலங்களுக்காகவுமே வதைக்கப்படுகின்றனர். வேறு சிலர் தேடப்படுபவரின் உறவி னர் அல்லது நண்பர் என்பதால் கைது செய்யப்படுகின்றனர்; செல்வாக்குமிக்க உள்ளூர் பிரமுகர்கள் அல்லது மாநில ஆளுங் கட்சி உறுப்பினர்கள் அல்லது வணிகர்கள் அல்லது நிலப்பிரபுக் களின் பொய் குற்றச்சாட்டுகளின் பேரிலும் கைது செய்யப்படு கின்றனர். பொருளாதாரச் சுரண்டலுக்கு அமைப்பு ரீதியிலான எதிர்ப்பு பலமாக உள்ள பீகார் போன்ற மாநிலங்களில் இது போல் நடப்பது சகஜமாக உள்ளது; உள்ளூர் ஆளும் கூட்டத்தின ரின் ஒடுக்குமுறைக்கான கைக்கருவியாக போலீசு அடிக்கடி செயல்படுகிறது.

''ஆயுதமேந்திய எதிர்ப்பை அரசாங்கம் எதிர் கொள்ளும் பகுதிகளிலும் வதைகள் பரவலாக உள்ளன; ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், அஸ்ஸாம், வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் நக்சல்பாரிகளின் நடவடிக்கைகள் அதிகமாக உள்ள மத்திய இந்தியப் பகுதிகள் இவ்வகைப்பட்டவை. இவ்விடங்களில் வாக்குமூலங்களைப் பெறுவதற்கும் தகவல்கள் சேகரிப்பதற்குமான வழிமுறையாகவும் வதைகள் மேற்கொள்ளப்படுகின்றன; ஆயுதமேந்திய குழுக்களின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கும் எதிர்த்து தாக்குவதற்கும் வதைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

''வதைபடுபவர்களை குப்புறப் படுக்கவைத்து கடுமையாக அடித்து நொறுக்குவது, மின் அதிர்ச்சி தருவது ஆகியவை மிகச் சாதாரணமான வதைமுறை. கனமான உருளைகள் அவர்கள் மீது உருட்டப்படுகின்றன. அவர்களைத் தீயால் சுடுகின்றனர், கூரிய கருவிகளால் குத்துகின்றனர், ஆசனவாயில் மிளகாய் பொடி அல்லது தடியான குச்சிகளை செலுத்துவது ஆகியவை சர்வசாதாரணமாக நடக்கின்றன. பிறப்புறுப்புகளை சிதைப்பது பற்றிய தகவல்களும் கிடைத்துள்ளன.



''பாலியல் பலாத்காரம் மிகச் சாதாரணமான வதைமுறை ஆகும். இது எந்த அளவுக்கு சகஜமாக இருக்கிறது என்பதை 'பீகார் போலீசின் மற்றுமொரு கும்பல் பாலியல் பலாத்காரம்' என்று 1988 ஆம் ஆண்டில் பலமுறை வெளிவந்த பத்திரிகைத் தலைப்பிலிருந்து அறியலாம்''.

கடந்த சில ஆண்டுகளில் 50-க்கும் மேற்பட்ட பாலியல் பலாத்காரங்களில் போலீசு ஈடுபட்டதாக 1989 செப்டம்பரில் இராஜஸ்தான் மாநில அரசாங்கம் ஒப்புக்கொண்டது. 1990 ஆம் ஆண்டில் ஜனவரி 1 முதல் பிப்ரவரி 11 வரையில் 12 காவல் நிலையங்களில் 20 போலீசு அதிகாரிகள் 14 பாலியல் பலாத்கா ரங்களில் ஈடுபட்டதாக டெல்லி போலீசு அறிவித்தது.

''எதிர்ப்பு காட்டுவதிலிருந்து ஆண்களை விலகச் செய்வது மற்றும் ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது கிராமத்தைச் சேர்ந்த ஆண்களைத் தண்டிக்கும் ஒரு வழிமுறையாக பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்வது என்பது போலீசு மற்றும் படை யினரால் கடைபிடிக்கப்படுகிறது''.

''தி ஸ்டேட்ஸ்மேன்' பத்திரிகைத் தலையங்கம் இது பற்றி கண்டித்துக் கூறியதாவது: 'போலீசு பெண்களைத் தவறாகப் பயன்படுத்துவது, அவர்களின் கணவன்மார்கள் என்ன லட்சி யத்திற்காக உள்ளனரோ அதற்கு எதிராக பதில் யுத்தம் நடத்துவ தற்கேயாகும்.

## வெளி உலகுக்கு கொண்டு வருவோர் மீதும் வதைகள்:

''இத்தகைய அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட கேடுக ளைப் பற்றி விசாரிக்க அடுத்தடுத்து வந்த இந்திய அரசாங்கங் கள் பிடிவாதமாக மறுத்து வந்துள்ளன. அறிக்கைகளை முன் வைத்தவர்களின் நேர்மையை இவை அடிக்கடி கேள்விக்குள் ளாக்க முயற்சித்து வருகின்றன. மக்களுரிமைச் செயல்வீரர்கள் பலர் இத்தகு வேலைகளைச் செய்ததற்காக சிறையில் அடைக் கப்பட்டனர்.

''மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்திய பத்திரிகை யாளர்களும் சிறையிடப்பட்டு அவமதிக்கப்படுகின்றனர். சூலை 1989 ல் பீகாரில் வெளியாகும் ஆவாஸ்-அ-ஹிந்த் என்ற பத்திரிக்கையின் 84 வயதான ஆசிரியர் பிரம்மதேவ் சிங் சர்மா என்பவர் போலீசால் இல்லத்திலிருந்து இழுத்து வரப்பட்டு நட்ட நடுவீதியில் பல மணி நேரம் நிற்கும் படி கட்டாயப்படுத்

தப்பட்டார். மாலதி மன்ஜியன் என்ற பழங்குடி இளம் பெண்ணை பகிரங்கமாக நிர்வாணப்படுத்தி சுயநினைவை இழக்குமளவுக்கு தாக்கிய அதிகாரிகளை தண்டிக்கத் தவறிய போலீசு அதிகாரிகளை கண்டித்து அவர் தலையங்கம் எழுதிய பின்னரே இச்சம்பவம் நடந்தது.

''பத்திரிக்கையாளர்கள் மற்றும் பிறரின் கடும் எதிர்ப்புக் குப் பின்னர்தான் அவர் விடுவிக்கப்பட்டார். இதற்குப் பொறுப் பான மூத்த அதிகாரி ஒருவர் உட்பட ஏழு அதிகாரிகள் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராக மேற்கொண்டு வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தகவல் இல்லை.

''வதைகள் அன்றாட நிகழ்ச்சிகள் என்ற உண்மையை அங் கீகரிக்க அரசாங்கம் விடாப்பிடியாக தவறுகிறது. இது இந்தியா முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்படும் கெட்டிப்பட்டுப் போன கேடுகெட்ட நடைமுறை தொடர்வதற்கே உதவுகிறது.

''சில இளைஞர் கூட்டங்கள் கொள்ளையில் ஈடுபடுவது அதிகரித்ததை எதிர்கொண்ட பீகார் போலீசு 1970-களின் இறுதி யில் அத்தகையவர்களை எச்சரிக்கும் முகாந்திரத்தில் சந்தேகத் துக்குரிய நபர்களை குருடாக்க முடிவு செய்தது. அக்டோபர் 1979 க்கும் நவம்பர் 1980 க்கும் இடைப்பட்ட காலத்தில் முப்ப துக்கும் மேற்பட்ட இளைஞர்களும் சிறுவர்களும் கோணிஊசி களால் குத்தியும் அமிலத்தை ஊற்றியும் குருடாக்குவதில் வெறித்தனமாக ஈடுபட்டது. குருடாக்கப்பட்டவர்களில் மிகக் குறைந்த வயதுள்ளவர் 16 வயது இளைஞர்.

''இக்கொடூரத்தை வெளியுலகுக்கு கொண்டு வந்தவர் பகல்பூர் சிறையின் கண்காணிப்பாளர். டிசம்பர் 1980ல் அவர் ஊதியம் ஏதும் தரப்படாமல் தற்காலிக வேலைநீக்கம் செய்யப் பட்டார்.

''இது தொடர்பாக முதல் விசாரணையை மேற்கொண்ட வர் பீகார் குற்றவியல் ஆய்வுத் துறையின் டெபுடி இன்ஸ்பெக்

டர் ஜெனரல். போலீசுதான் குருடாக்கும் நிகழ்ச்சிகளை மேற் கொண்டதா? என்பதைக் கண்டறிய அவர் பகல்பூருக்கு அனுப் பப்பட்டார். இது பற்றி அவர் பின்னர் கூறியதாவது: 'போலீசின் பால் நான் அனுதாபம் கொண்டவன் என்பதாலும், எல்லாவற் றையும் மூடிமறைத்துவிடுவேன் என்று எதிர்பார்த்தும் எனக்கு அப்பொறுப்பு தரப்பட்டது. இத்தகைய கொடூரத்தை போலீசார் செய்திருக்கமாட்டார்கள் என்ற எதிர்பார்ப்புடன் நான் சென் றேன். ஆனால் பாதிக்கப்பட்டவர்களை இரண்டு நாட்கள் பரிசீ லித்த பின்னர் 10 போலீசு அதிகாரிகளுக்கு எதிராக 32 வழக்குகள் தொடரும் அளவுக்கு தடயங்கள் கிடைத்தன.

''அவருடைய முதல் அறிக்கை கிடைத்தவுடன் மேலதிகா ரிகளால் அவருடைய விசாரணைகள் தடுக்கப்பட்டதாக அவர் குற்றஞ்சாட்டினார். இருப்பினும், டிசம்பர் 80-ல், பீகார் அரசுக்கு இவ்வழக்குகள் பற்றிய 70 பக்க அறிக்கையை அவர் அளித்தார். ஜனவரி 1981-ல் ஒவ்வொரு வழக்கைப் பற்றியுமான விரிவான அறிக்கையும் அளித்தார். பிப்ரவரி 1981-ல் அவர் தனது விசா ரணை அலுவலகத்தைக் காலி செய்யும்படி பணிக்கப்பட்டது டன் மறுநாள் பதவியிறக்கமும் செய்யப்பட்டார்.



''இந்தியாவில் நிலவும் வதைமுறைகளின் தலையாய கூறுகளை பகல்பூரில் நடந்த கைதிகளை குருடாக்கும் போலீசு குரூரங்கள் விளக்குகின்றன. அரசு மற்றும் உள்ளூர் நீதித்துறை அதிகாரிகள் வதைகளை அங்கீக ரித்து ஊக்குவிப்பது, வதைகள் பற்றிய உண்மைகளை மூடி மறைக்கும் வழக்கம், சரியான விசாரணைகளை நடத்த தொடர்ச் சியாக மறுப்பது, நீதித்துறை நட

வடிக்கைகள் பல்லாண்டுகள் இழுத்த டிக்கப்படுவது ஆகியவற்றை இவை வெளிப்படுத்துகின்றன. குருடாக்கப் பட்டு 10 ஆண்டுகள் கழித்து உச்சநீதி மன்றம் குருடாக்கப்பட்டவர்கள் நிரப ராதிகள் என தீர்மானித்து விடுவித்தது.



''எப்படி இருப்பினும் இதுவே ஒரு விதிவிலக்கான விசயம்தான், ஏனெனில் இதற்கு எதிரான வெகுமக் கள் கண்டனம் அரசாங்கத்தின், வழக்கு தொடுத்த அதிகாரிகளின் உயர் மட்டங் களையே உலுக்கிவிட்டது. இவற்றுக்கு பொறுப்பான ஒரு சில ராவது தண்டிக்கப்பட்டனர்.

''இவ்வளவுக்கும் பின்னர் கூட இதில் சம்பந்தப்பட்ட பல போலீசு அதிகாரிகள் மீது வழக்கே தொடுக்கப்படவில்லை; வேண்டுமென்றே கைதியை குருடாக்கியதாக நிரூபிக்கப்பட்ட ஒரு போலீசு அதிகாரிக்கு அளிக்கப்பட்ட அதிகபட்ச தண்டனை மூன்றே ஆண்டுகள்தான்.''

## வதைக்கப்படுவோர் அடித்தட்டு மக்களே!

''இந்தியாவில் வதைகளின் இலக்காக பெருமளவில் உள் ளாகின்றவர்கள் கிரிமினல்கள் என சந்தேகிக்கப்படுவர்கள் தான். வதைகளுக்கு உள்ளாவோரில் பலர் வேலையற்றவர்கள், குடிசைவாசிகள் அல்லது பிழைப்பு தேடி நகரங்களுக்கு வருப வர்களே. எடுத்துக்காட்டாக, பாலியல் பலாத்காரத்துக்கு உள் ளாகும் பெண்களில் பலர் பிழைப்பு தேடிவந்தவர்களே; இத்தகு நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் அவர்கள் இதை மேலும் முன்னெடுத் துச் செல்ல அஞ்சி நகரை விட்டே ஓடிவிடுகின்றனர்.

''போலீசு அல்லது படையினரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு காட்டுவோரை வதைப்பதிலும் தண்டிப்பதிலும் தனி

யொரு முறையே உள்ளது. செல்வாக்குள்ள உள்ளூர் பிரமுகர்க ளின் தவறான குற்றச்சாட்டுகள் தூண்டுதல்கள் காரணமாக சாதா ரண மக்களை போலீசார் கைது செய்து வதை செய்வது பற்றி இந்தியாவின் பல மாநிலங்களில் குற்றச்சாட்டுகள் உள்ளன.

''அரசியல் காரணங்களுக்காக தாழ்த்தப்பட்டவர்களும் பழங்குடியினரும் அடிக்கடி வதைக்கப்படுகின்றனர்; பொருளா தார சுரண்டலுக்கு எதிராக அமைப்பு ரீதியில் ஈடுபடுவதை தடுக் கும் அல்லது தண்டிக்கும் நோக்குடன் இவை நடைபெறுகின் றன. நிலப்பிரபுக்கள் போன்ற உள்ளூர் ஆளும் கும்பல்களின் தூண்டுதல்களின் பேரிலும் கூட்டுடனும் பழங்குடியினர் மற் றும் தாழ்த்தப்பட்டோர் குடியிருக்கும் கிராமங்களில் போலீசு வேட்டை நடத்தப்படுகிறது; மக்கள் வதைக்கப்படுகின்றனர். பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்படுகின்ற னர். பீகாரில் இத்தகைய நிகழ்ச்சிகள் சர்வசாதாரணம்.

''குறைந்தபட்சக் கூலிக்கும் குறைவான கூலிக்கு வேலை செய்ய மறுத்த பூர்ணியா மாவட்டத்தைச் சேர்ந்த மஜ்ஜுவா கிராமத்தைச் சேர்ந்த 23 பெண்கள் மே 1988 ல் போலீசு வேட்டை யின்போது போலீசால் பலாத்காரம் செய்யப்பட்டனர்; உள்ளூர் ஒப்பந்தக்காரரின் (காண்ட்ராக்டரின்) தூண்டுதலின் பேரில் போலீசார் இதைச் செய்தனர். ஆயுதமேந்தியிருந்த போலீசார் எத்தகைய சிறு எதிர்ப்பையும் பலாத்காரமாக ஒடுக்கினர். பாலி யல் பலாத்காரத்துக்கு உள்ளானவர்ளில் 80 வயது மூதாட்டியும் ஒருவர்; ஒரு வயது பெண் குழந்தை ஒன்றும் பாலியல் ரீதியில் அவமதிப்புக்குள்ளானது.

''இராஜஸ்தானில் உதய்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஹத்ம தியா என்ற பழங்குடியினர் கிராமத்தில் போலீசு எவ்வாறு நடந்து கொண்டது என்பதைப் பற்றிய அறிக்கையை, ஜனநாயக உரிமைக்கான மக்கள் யூனியன், ஜூன் 1991-ல், வெளியிட்டது. ஏரிக்கரையின் அடிவாரத்தில் பாரம்பரிய உரிமை கொண்ட 37 கிராமத்தவர்கள் பயிரிட முயற்சித்தனர்; இதை எதிர்த்து அத்து

மீறி நுழைந்ததாகவும் திருடியதாகவும் பெரு நிலப்பிரபு ஒருவர் புகார் செய்ததாக அந்த அறிக்கை கூறுகிறது.



''புகாரை விசாரிக்க கிராமத்துக்குச் சென்ற 11 போலீசு அதிகாரிகள் பழங்குடிப் பெண்களிடம் மோசமாக நடந்து ஒரு கலவரத்தை உருவாக்கினர். சில போலீசார் நையப் புடைக்கப்பட்டனர். உதைபட்டுத் திரும்பிய போலீசார் கிராமத்தவர்கள் மீது தாக்குதல் மற்றும் கொலை முயற்சிக்காக வழக்கு தொடுத்தனர்.

''நான்கு வாரங்களுக்குப் பின்னர் எதிர்தாக்குதலை நடத்தினர். 14 ஜீப்புகள், 4 ட்ரக்குகள், ஒரு பஸ் ஆகியவற்றில் போலீசாரும் நிலப்பிரபுக்களின் அடியாட்களும் கிராமத்தை சுற்றி வளைத்து கிராமத்தவர்களை ஒரு வயலில் கொண்டு போய் நிறுத்தினர். பின்னர் அவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தி 3 பேரை காயப்படுத்தினர். பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு புடைக்கப்பட்டனர்.


**ஆயுதமேந்திய எதிர்ப்பை நசுக்க அரசு பயங்கரவாதம்**

''சுதந்திரத்துக்காக அல்லது கூடுதல் சுயாட்சிக்காக போராடும் ஆயுதமேந்திய அரசியல் குழுக்கள் செயல்படும் பகுதிகளில் வதைகள் என்பது மிகவும் சர்வ சாதாரணம். ஜம்மு காஷ்மீர், பஞ்சாப் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் இத்தகைய குழுக்கள் செயல்படுகின்றன.

''ஜம்மு காஷ்மீரில் நடந்த வதைகளின் உண்மையான அளவை மதிப்பிடுவது என்பதே இயலாததொன்று. எந்தவித விசாரணையுமின்றி காவலில் வைக்கப்பட்டவர்கள் 15,000-க்கும் அதிகமானவர்கள் என்று 1991 ஜூலையில் அதிகார

பூர்வமற்ற தகவல்கள் மதிப்பிட்டன. 1989 முதல் இவ்வாறு சிறைவைக்கப்பட்டவர்களில் பலர் தாம் விடுவிக்கப்பட்ட பின்னர் போலீசு காவலில் வதைக்கப்பட்டதாகவும் அவமதிக்கப் பட்டதாகவும் குற்றம் சாட்டினர்.

''சிறிநகர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் காசி மஸ்ராக் என்ற அவசர சிகிச்சைப் பிரிவு தலைமை மருத்துவர் ஒரு பிரிட்டிஷ் பத்திரிகையாளரிடம், நவம்பர் 1991-ல் 'நான்



கடந்த ஆண்டில் வதைக்கப்பட்ட 250 பேருக்காவது மருத்துவம் செய்திருப்பேன்' என்று கூறினார் இவர்களில் ஆண்குறி இறுக்கி கட்டப்பட்டு பெருமளவிலான நீரைக் குடிக்கக் கட்டாயப்படுத் தப்பட்டவர்களும் அடங்குவர் என்றும் அவர் கூறினார்.

''ஜூலை 1991 துவக்கத்தில், சமீபத்தில் விடுவிக்கப்பட்ட குப்வாரா மாவட்டத்தைச் சேர்ந்த ஹைய்ஹமா-பேயர் போரா கிராமத்தைச் சேர்ந்தவர்கள், இந்திய இராணுவத்தால் அடைக்

கப்பட்டிருந்த தாங்கள் எவ்வாறு வதை செய்யப்பட்டோம் என் பதை மற்றொரு பிரிட்டிஷ் பத்திரிகையாளரிடம் கூறினர். பேட் டியின் போது அவர்கள் உடலில் பெரிய வடுக்கள் இருந்தன; எலக்ட்ராடுகளால் சுடப்பட்ட தீக்காய வடுக்களும், கயிறுக ளால் பிணைக்கப்பட்டதால் ஏற்பட்ட வடுக்களும் இருந்தன.

''பாதம் முதல் முழங்கால் வரை கட்டுப் போட்ட ஒருவர் கூறியதாவது: அடியில் நிலக்கரி, அதன்மீது மணல், அதன் மீது துண்டு துக்காணியான இரும்புகளைக் கொண்டு ஒரு படுகை அமைக்கப்பட்டு அதன்மீது ஓடும்படி (அதில் நடப்பதே சிர மம்) கைதிகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். வழக்கு ஏதுமின்றி அனைவரும் விடுவிக்கப்பட்டனர்; ஆனால் போராளிகளை ஆத ரித்தால் மீண்டும் கைது செய்து வதைப்போம் என படையினர் அச்சுறுத்தி அனுப்பினர்.



''ஜம்மு காஷ்மீரில் கலக-எதிர்ப்பு நடவடிக்கையின் போது உள்ளூர் மக்களை அவமதித்து அச்சுறுத்துவதற்கு ஒரு முறைப்படுத்தப்பட்ட வழிமுறையாக பாலியல் பலாத்காரம் கடைபிடிக்கப்படுகிறது.

''மே 1990-ல், முபினாகனி என்ற இளமணமகள் திருமணச் சடங்கு முடிந்து கணவன் வீட்டுக்குச் சென்று கொண்டிருக்கை யில் சாலைத் தடுப்பரணில் வைத்து எல்லைக் காவல் படையின ரால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். ஏழு மாத கர்ப்பி

ணியான அவளது அத்தையும் இதே மாதிரி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார்.

''திருமணக் குழுவினர் சுட்டுக் கொண்டிருந்த இரு படை யூனிட்டுகளுக்கு இடையில் தவறுதலாக சிக்கிக் கொண்டதாக அதிகாரபூர்வ அறிவிப்பு கூறியது. பாதிக்கப்பட்டவர்களோ, சாலைத்தடுப்பரண் அருகில் சென்று கொண்டிருந்த போது எத்தகைய முன்னறிவிப்புமின்றி சுடப்பட்டதாகவும், அதில் ஒரு ஆடவர் இறந்ததாகவும் மற்றும் சிலர் காயம்பட்டதாகவும், அதன் பின்னரே இரு பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் கூறினர்.

''முபினாகனி ஒரு நிருபரிடம் கூறியதாவது: 'நாங்கள் பரிதாபமாக கதறினோம். எனது கணவனை இன்னும் நான் பார்க்கக் கூட இல்லை என்று எல்லைக் காவல் படையினரிடம் கூறினேன். ஆனால் அவர்கள் எதையுமே கேட்கவில்லை. நான்கு முதல் ஆறுபேர் என்னை பலாத்காரம் செய்தனர் என நினைக்கிறேன்.

''இச்செய்தி வெளிப்பட்டவுடன் உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் பத்திரிகைகளின் கவனத்தை இது வெகுவாக ஈர்த்தது. இதன் விளைவாக போலீசு விசாரணை நடத்தப்பட்டது. மூத்த அதிகாரியின் கண்டுபிடிப்பு அந்தநிகழ்வை உறுதிப்படுத்தியது. எப்படி இருந்தபோதிலும் இவற்றுக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவே இல்லை.

''ஜனநாயக உரிமைகளுக்கான மக்கள் யூனியன் மே 1991-ல் அஸ்ஸாம் பற்றி ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதன் இறுதிப்பகுதியில் குறிப்பிட்டதாவது: இராணுவக் காவலில் வைக்கப்பட்டவர்களில் மிகப்பலர் வதைக்கப்பட்டனர். வதைக்குள்ளாக்கப்பட்டவர்களில் பலரை நாங்கள் பேட்டி கண்டோம், மூன்று மருத்துவமனைகளுக்குச் சென்றோம், மருத்துவமளித்த மருத்துவர்களைச் சந்தித்தோம், நீதிமன்ற ஆவணங்கள் பலவற்றை பார்வையிட்டோம்.

''அடித்து நொறுக்குதல் , ஆடைகளைக் களைந்து நிர்வா ணப்படுத்துதல், தலை கீழாக கட்டி தொங்கவிட்டு தலையிலும் மார்பிலும் புடைத்தல், மார்பில் கால் பூட்சுகளால் உதைத்தல், குளிர்ந்த நீரை மேலே ஊற்றுதல், கழுத்தளவுக்கு புதைத்து தலையில் வாளியைக் கவிழ்த்து வைத்தல், கிடுக்கிகளால் விதைப் பையை நசுக்குதல், குளிர்ந்த நீர் நிரம்பிய ட்ரம்களில் முக்குதல், பல நாட்கள் தொடர்ந்து தூங்க விடாமல் செய்வது, உணவும் நீரும் பல நாட்கள் தராமலிருப்பது போன்றவை வதைகளின் முறைகளாகும்.

''ஆனால் மின் அதிர்ச்சிக்கு உட்படுத்துவதே மிகச் சாதார ணமான வடிவமாகும். காது, நாக்கு, அக்குள், பிறப்புறுப்பு, தலை ஆகியவை போன்ற மிகவும் முக்கியமான உடற்பகுதிக ளில் மின் அதிர்ச்சி, சில சமயங்களில் மேலும் மேலும் கூடுதல் அழுத்த மின் அதிர்ச்சி,தரப்படுகிறது. இரு நெற்றிப் பொட்டுக ளில் மின் அதிர்ச்சி தருவதன் மூலம் அதிர்ச்சி அலை அலையாக மூளையைத் தாக்குகிறது.

''போடோ இனப்பெண்களை போலீசும் இராணுவமும் பாலியல் பாலாத்காரத்துக்கு உட்படுத்துவதையும் இழிவுபடுத் துவவதையும் பற்றிய தகவல்கள் பரவலாக உள்ளன. கிராமங்க ளில் பழங்குடி போராளிகளை வேட்டையாடச் செல்லும் போது பாலியல் பலாத்காரம் அடிக்கடி நடைபெறுகிறது.

''பஞ்சாபில் வதைகளைப் பாவிப்பது அதிகாரபூர்வமா கவே உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது. 1989 பிப்ரவரியில் அமிர்த சரஸ் சிறையில் நீதிபதி எஸ்.எஸ் சோதி என்பவரால் நீதி விசா ரணை நடத்தப்பட்டது. சட்ட பூர்வமாக கைது செய்யப் படுவ தற்கு முன்னர் சட்ட விரோதக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் போது அவர்களில் பலர் போலீசால் வதைக்கப்பட்டதை அவர் கண்டறிந்தார்''.

## இந்திய அரசின் திடலடி மறுப்புகள்

இந்தியா முழுவதிலும் பரவலாக வதைகள் நடக்கும்போ தும், மனித இனத்திற்கு எதிரான இக்கொடுமையை எவ்வாறு

கட்டுப்படுத்துவது என்பதைப் பற்றி இந்திய அரசாங்கம் எப் போதுமே அக்கறை செலுத்தியது இல்லை.

''ஐக்கிய நாடுகள் அவையின் வதைகள் பற்றிய சிறப்பு ஆலோசனைக் கூட்டத்தில் 1988-90 ஆண்டுகளில் நடந்த குறிப் பிட்ட 33 வதைகள் பற்றி எழுப்பப்பட்டதற்கு பதிலளித்தபோது இந்திய அரசாங்கம் அவற்றை மறுத்தது; அவை இட்டுக் கட்டப் பட்டவை என்று கூறியது, போலீசின் கூற்றுகளை அப்படியே ஒப்பித்தது, குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்படுகின்றன என்று பல வாறு கூறியது; நீதி மன்றங்களில் உறுதிப்படுத்தப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு எதிராகக் கூட செயல்பட மறுத்துள்ளது.

''சிறுபான்மையினருக்கு பாகுபாடு காட்டுவதைத் தடுப்ப தும் அவர்களைக் காப்பதும் பற்றிய ஐ.நா. துணைக் கமிஷனின் 42-வது கூட்டத் தொடரில் ஆகஸ்ட் 27,1990-ல், இந்தியப் பிரதி நிதி அளித்த பதில் ஒரு எடுப்பான வகை மாதிரியாகும்.

''ஒரு குறிப்பிட்ட நிலைமையைச் சமாளிக்கத் தேவை யான குறைந்தளவு பலப் பிரயோகத்துக்கு மேல் ஒரு போலீசு அதிகாரி பாவிப்பதை இந்தியச் சட்டம் தடை செய்கிறது. ஆய்வு மற்றும் விசாரணையின் போது வதைகளை ஏற்படுத்தக் கூடிய முறைகளை கையாளாதிருக்கும்படி போலீசாருக்கு அரசாங்கம் வழிகாட்டுதல்கள் தந்துள்ளது. கைதிகள் வதைக்கப்படுவது போன்ற மனித உரிமை மீறல்கள் நிகழாவண்ணம் இந்தியாவில் ஒரு முழு வலைப்பின்னலான காப்பு முறைகளைக் கொண்ட ஒரு ஜனநாயக கட்டமைப்பு உள்ளது.

''ஒரு முழுமையான சுதந்திரமான பத்திரிகை, மக்கள் விழிப்புணர்வு, உயிரோட்டமான ஜனநாயகத்தின் நிறுவனங் கள் போன்றவையே இக்காப்பு முறைகள். இக்காப்பு முறைகள் இருந்த போதிலும் உலகின் மற்ற பகுதிகளில் நடப்பது போல ஏதோ இங்கொன்று அங்கொன்றாக கைதிகள் வதைக்கப்படு வது நடக்கக் கூடும். வதைகள் பற்றிய பிரச்சினை பத்திரிகைக ளில் அடிபடும் போதெல்லாம் முறையான நீதிமன்ற விசார ணைகள் மேற் கொள்ளப்படுகின்றன; யாராவது தமது



கடமையில் தவறியதாக கண்டறியப்பட்டால் தகுந்த நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கைதிகளை வதைப்பதாக கண்டறியப்படும் போலீசார் மிக கடும் தண்டனைகளைப் பெறுகிறார்கள்''.

## நாளும் பறிக்கப்படும் உரிமைகள்

*அப்படியானால், வதைகள், சட்டபூர்வமானவையா?*

*வதை முறைகளைப் பாவித்து ஒப்புதல் வாக்கு மூலங்கள் பெறலாமா? அவற்றை நீதி மன்றங்களில் அத்தாட்சியாக முன் வைக்கலாமா?*

*இத்தகைய ஒப்புதல் வாக்கு மூலங்களை நீதி மன்றங்கள் அத்தாட்சியாக ஏற்கப் போகின்றனவா?*

*ஜனநாயக உரிமை பாதுகாப்புக் கழகம் தனது அறிக்கை யில் குறிப்பிடுவதாவது: ''போலீசு காவலில் கைது செய்து வைக்கப்பட்டு உள்ளவர்களை தாக்கி துன்புறுத்துவது — நடு வீதியில் தாக்கி துன்புறுத்துவது கிடக்கட்டும் — அனுமதிக்கப்ப டுவது இல்லை என்பது மட்டுமல்ல, இவ்வாறு செய்வது இந்தி யத் தண்டனைச் சட்டம் பிரிவுகள் 330 மற்றும் 331-ன் படி தண்டனைக்குரிய குற்றமுமாகும். இத்தகைய நடவடிக்கை களை போலீசு சட்டம் 1881 பிரிவு 29 மற்றும் இந்திய அரசியல் சட்டம் 20 (3) ஆகியவை தடை செய்கின்றன.*

''போலீசு நன்னடத்தை விதிகள் — விதி 3 கூறுவதாவது: 'அவர்கள் (போலீசார்) நீதித் துறையின் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு வழக்குகளில் தீர்ப்பளிக்க முனைதல் கூடாது; தனி நபர்களைப் பழிவாங்குவதோ குற்றம் சாட்டப்பட்டவரை தண் டிப்பதோ கூடாது' ஒருவரது குற்றம் நிரூபிக்கப்படும் வரை, குற்றமிழைக்காதவர் என்ற நிலையை அனுபவிக்கும் உரிமை கைது செய்யப் பட்டவருக்கு உண்டு என்று இந்திய சாட்சிகள் சட்டம் பிரிவு 101 தெளிவாக கூறுகிறது. இச்சட்டத்தின் உணர்வை உச்ச நீதி மன்றத்தின் பல தீர்ப்புகள் உறுதிப்படுத்தி உள்ளன.

''இந்திய அரசியல் சட்டம் பிரிவு 21-ன் படி நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் கண்ணியமாக வாழும் உரிமை உள்ளது. ஆனால், துரதிருஷ்டவசமாக, அரசியல் சட்டத்தின் பிரிவு 22 உட்பிரிவு 2 (3) (B) மற்றும் உட்பிரிவு 2 (4) மக்களின் உரிமை பறிக்கும் சட்டங்களை இயற்ற நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்குகிறது; 1950 முதல் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் தடுப்புக் காவல் சட்டம், மிசா, தேசியப் பாதுகாப்புச் சட்டம், அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம், தடா போன்ற மக்கள் விரோதச் சட்டங்களை இயற்றி, எல்லா அரசாங்கங்க ளும் விதிவிலக்கில்லாமல் மக்களின் விருப்பார்வங்களை ஈவி ரக்கமற்று ஒடுக்கி உள்ளன.


''இந்த எல்லையற்ற அதிகாரத்தை அரசியல்வாதிகள் போலீசின் உதவியுடன் பெருமளவில் கேடாகப் பயன்படுத்தி உள்ளனர். இச்சட்டங்கள் மக்களைப் பொறுத்தவரை, அரசியல் சட்டப் பாதுகாப்பு என்பதே உண்மையானதாக இல்லாமல் கற்பனையானதாக்கி விட்டன. மக்கள், அதாவது, ஏதுமற்றவர் கள் — தாழ்த்தப்பட்டவர்கள், ஒடுக்கப்படும் வர்க்கங்கள் — நாட்டின் மக்கட் தொகையில் சரிபாதியாக உள்ளவர்களின் நிலை இதுதான்.

போலீஸ் அதிகாரியின் முன்னிலையில் பெறப்படும் குற் றம் சாட்டப்பட்டவரின் ஒப்புதல் வாக்குமூலம் எந்தவொரு

நாகரிக நாட்டிலும் நீதி மன்றங்களில் அத்தாட்சியாக ஏற்கப் படுவது இல்லை. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, இந் நாட்டில் சில வழக்குகளில் இத்தகைய ஒப்புதல் வாக்குமூலங்கள் அத் தாட்சிகளாக ஏற்கப்படுகின்றன. இரயில்வே சொத்து (சட்ட விரோதமாக வைத்திருப்பது) சட்டம் 1966, பிரிவு 8 இத்தகை யதே.

இச்சட்டம் பற்றி உச்ச நீதிமன்றம் 1981-ல் கூறியதாவது: ''இச்சட்டத்தின் 3-வது பிரிவின் கீழான ஒரு குற்றம் பற்றி விசாரிக்கும் இரயில்வே பாதுகாப்பு படை அதிகாரி சாட்சிகள் சட்டம் பிரிவு 25-ன் படி ஒரு 'போலீஸ் அதிகாரி' அல்ல; எனவே இச்சட்டத்தின் கீழ் விசாரணை நடத்தும் போது அவர் பதியும் ஒப்புதல் வாக்குமூலம் அல்லது குற்றம் தொடர்பான அறிக் கையை அத்தாட்சியாக கருதுவதிலிருந்து விலக்கப்பட முடியாது''.

இரயில்வே பாதுகாப்புப் படைச் சட்டம், 1957, பிரிவு 14-ன் கீழ் இத்தகைய அதிகாரம் உள்ளது. முந்தைய இரு சட்டங்களிலி ருந்து வழி கண்டு பிடித்து தடா சட்டம், 1987, பிரிவு 15-ன் படி இந்த அதிகாரம் போலீசு சூப்ப ரின் டென் டெண்டுக்கும் அதற்கு மேற் பட்ட போலீசு அதிகாரி களுக் கும் வழங்கப்ப டுகிறது. இதன் படி குற்றம்



சாட்டப்பட்டவரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவும் நீதிமன்றத்தில் அத்தாட்சியாக பயன்படுத்தவும் அதிகாரம் வழங்கப்படுகிறது. தடுப்புக் காவல் சட்டங்களிலேயே மிகக் கொடூரமானது தடா சட்டம். இத்தகைய அதிகாரம் ஒரு போலீசு அதிகாரிக்கு வழங்கப்பட்ட நிலையில் இந்த நாட்டையும், இதன் குடிகளையும் கடவுள் காப்பாராக!

**அடிப்படை உரிமைகள் சிறைக் கைதிக்கும் உண்டு!**

சுனில் பத்ரா என்ற கைதி திகார் சிறை மருத்துவமனை பதிவேட்டில் உள்ள ஒரு விஷயத்தை (சக கைதியின் உடல் நிலை பற்றி குறிப்பிடப்பட்டதை — வெ.ர்) உச்ச நீதி மன்றத் தின் கவனத்துக்கு கொண்டு வந்தார். சிறை மருத்துவமனை குறிப்பேட்டில் கூறப்பட்டு இருப்பதாவது: ''பிரகலாத் என்பவ ரின் மகனான பிரேம் சந்த் என்ற கைதியின் ஆசன வாயில் யாரோ குச்சியை பலாத்காரமாக செலுத்தியதால் அவரது ஆசனவாய் கிழிந்து விட்டது. இரத்தப்போக்கு நிற்கவில்லை; அவருக்கு அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது. உடனடியாக அவர் இர் வின் மருத்துவமனைக்குச் சென்றாக வேண்டும்.''

சிறை மருத்துவமனை பதிவேட்டில் குறிப்பிட்டு இருந்தது உச்ச நீதி மன்றத்தின் மனசாட்சியைக் கிளறி விட்டது. அரசியல் சட்டம் உத்திரவாதம் செய்யும் உயரிய அடிப்படை உரிமை களை சிறையிலிருக்கும்போது கூட ஒருவர் இழந்து விடுவ தில்லை என்று உச்சநீதி மன்றம் உறுதிபடக் கூறியது.

''ஒருவர் சிறைக்கு உள்ளேயிருந்தாலும் அல்லது வெளி யேயிருந்தாலும் அரசியல் சட்டம் உத்திரவாதம் செய்யும் அடிப் படை உரிமைகளை சரியான, நீதியான, நியாயமான முறைக ளில் அனுபவிக்கும் அவரது உரிமையைப் பறிக்க கூடாது. அரசியல் சட்ட நோக்கத்தை, சிறை நிர்வாகம் மறுத்து விடா மல், உறுதி செய்வதற்கான பொறுப்பை நீதிமன்றம் தொடர்ச்சி யாக ஏற்க வேண்டும்.

அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதி டக்ளஸ் கூறியதாவது: ''கைதிகளும் அரசியல் சட்டம் உத்திரவாதம் செய்யும் உரிமைகள் அனைத்தையும் அனுபவிக்கும் உரிமை கொண்ட மனிதர்களே; நியாயமான முறைகளில் முடிவு செய்யப்பட்டு, அரசியல் சட்ட ரீதியில் அவர்களது உரிமைகள் தடை செய்யப்பட்டால் ஒழிய, அவர்களுக்கு இவ்வுரிமைகள் உண்டு''. உச்ச நீதிமன்றம் கூறுவதாவது: ''ஒரு கைதியின் மிக முக்கியமான உரிமை என்ன வென்றால், உடல் ரீதியில் ஆரோக்கியமாகவும், மனரீதியில் ஆளுமையுடனும், இருப்பதற்கான உரிமையே''.

## சிறை நிர்வாகம் குறித்து உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்கள்

சிறை நீதியின் அரசியல் சட்டபூர்வமான மற்றும் நிர்வாக ரீதியான அம்சங்களைப் பொறுத்தவரை உச்ச நீதிமன்றம் பின்வரும் வழிகாட்டுதல்களை வழங்கியது:

(1) ''அரசியல் சட்டத்தின் பிரிவு 21-லிருந்து கூறாமலே விளங்குவது என்னவென்றால் உயிர் அல்லது உரிமைகளின் உயிரோட்டம் நிறுத்தி வைக்கப்படுவதோ, விலங்கு நிலையில் இருத்தி வைக்கப்படுவதோ புதிய, முறையான விசாரணை முறைகளின்றி மேற்கொள்ளப்படலாகாது என்பதே. கைதிகளை கையாளுவதில் நியாயமான முறை என்பது சட்டத்தை எளிதில் அவர்கள் அணுக வழி இருப்பதாகும்; அவர்களுக்கு மறுக்கப்படும் உரிமை என்பது சிறைக் கதவுகளுக்கு வெளியில் அவர்கள் நடமாட இயலாது என்ற அளவோடு இருப்பதாகும்.

(2) ''நீதி மன்றத்தின் சிறையிடல் மற்றும் தீர்ப்புக்கு அவசியமானதற்கு அப்பால் எந்த ஒரு கைதியும் தனிப்பட்ட முறையில் உரிமை இழப்புக்கு உள்ளாக்கப்படக் கூடாது. படிக்க எழுதவும் உடற்பயிற்சி — பொழுது போக்கு, தியானம் — ஒப்புவித்தல் மிகு குளிர் — வெப்பத்திலிருந்து பாது

காப்பு என்ற ஆக்கபூர்வ வசதிகள், கட்டாய நிவாரணம் பலாத்கார ஓரினச் சேர்க்கை மற்றும் பிற தாங்கவொண் ணாத இழிவுச் செயல்கள் போன்ற அவமானங்களிலிருந்து சுதந்திரம் போன்ற எல்லா உரிமைகளும் ஒரு கைதிக்கு உண்டு.

(3) ''உடல் ரீதியிலான தாக்குதல்களுக்கு அப்பாற்பட்டு பன் முக வடிவிலான உரிமை பறிப்புகள் உள்ளன. தனிமைச் சிறையில் அடைப்பது, அவசியமான வசதிகளை மறுப் பது, உறவினர்களோ நண்பர்களோ வரமுடியாத அள வுக்கு தொலை தூர சிறைகளுக்கு மாற்றி சமூக உறவுக ளைத் துண்டிப்பது, இழிவான வேலையை ஒதுக்குவது, முரட்டுத்தனமான அல்லது வெறித்தனமான குழுக்களில் இணைத்து விடுவது ஆகிய பல்வேறு வழிகளில் ஒருவ ரைத் தண்டிக்க முடியும்.

''இத்தகைய உரிமைச் சிதைப்பும் பறிப்பும் வாழ் வையும் உரிமைகளையும் சிதைப்பனவாகும்; அரசியல் சட்ட 21-வது பிரிவின் படி இவை அனுமதிக்கப்படக் கூடாது. நியாயமான அறிவு பூர்வமான, பலனளிக்க கூடிய தான கைதிகளைத் திருத்தும் படியான சட்ட நடைமுறை இருக்க வேண்டும். இத்தகைய உரிமைப் பறித்தல்கள் அரசியல் சட்டப் பிரிவு 14-ன் படி — வழிகாட்டுதலற்று விருப்பு வெறுப்பைச் சார்ந்ததாக இது இருக்கும் போது — இது பாரபட்சமானது; ஈடு செய்ய முடியாததாகவும் மேல் முறையீடற்றதாகவும் இருக்கும் போது இது அரசி யல் சட்டம் பிரிவு 19-க்கு முரணானது; இயற்கை நீதியை மறுப்பதாக இருக்கும் போது அரசியல் சட்டம் 21-வது பிரிவுக்கு எதிரானது.

''இது போலவே, தடுத்துக் கொள்வதற்கான வழி ஏதும் தராமல் அல்லது குறிப்பான வழக்குகளில் பாரபட்ச

மற்ற, தகுதியான, வாய்ப்புள்ள நிறுவன ஒப்புதலின்றி தண்டனை அல்லது உரிமைப் பறித்தலுக்கு ஒரு கைதி உட்படுத்தப்படக் கூடாது.

(4) ''சிறை நிர்வாகம் நீதிமன்றத் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டும் (கைதிகள் சட்டம் 1900, பிரிவுகள் 15 மற்றும் 16-ன் படி). தீர்ப்பை அமுல்படுத்துவது என்பதன் பொருள், தீர்ப்புக்கு அப்பால் செல்வது சட்டவிரோதமானது என்பதாகும். வெறுமனே சிறையிடுவது மற்றும் சிறைக்கு வெளியில் நடமாடும் உரிமையை பறிப்பது என்பதற்கு அப்பால் சென்று, கைதியைத் தாக்குவது, தீர்ப்புக்கு அடங்காதவற்றைச் செய்ய நிர்ப்பந்திப்பது என்பது அரசியல் சட்டம் பிரிவு 19-க்கு எதிரானது.

''கடுங்காவல் தண்டனையானது கடும் உழைப்பு செய்வதுதானே ஒழிய கொடூரமான உழைப்பு அல்ல. சிறைகள் சட்டம் பிரிவு 53-ல் குறிப்பிடப்படும் 'கடின உழைப்பு' என்பதற்கு மனிதாபிமானத் தன்மை தரவேண்டும். எனவே, பாரபட்சமான ஒரு அதிகாரி மிக கொடூரமான மற்றும் இழிவான வேலைகளைச் செய்யும்படி ஒரு கைதியை நிர்ப்பந்திப்பது சட்ட வரம்பை மீறுவதாகும்......

(5) ''பிரிவு 27 (2) மற்றும் (3) கைதிகளைப் பிரித்து வைப்பது தொடர்பானது. இவற்றை சிறை அதிகாரிகள் மீறாதவாறு நீதி மன்றம் அவ்வப்போது சரிப்படுத்தவும், அப்படி மீறும்போது சிறை அதிகாரிகளைத் தண்டிக்கவும் வேண்டும். சிறையில் உள்ள சிறுவர்கள் பெரியவர்களால் பாலியல் அத்துமீறல்கள் மற்றும் கட்டாய உழைப்புக்கு உட்படுத்தப்படுகின்றனர். இளங் கைதிகள் இவற்றிலிருந்துப் பாதுகாக்கப்பட்டு பிரித்து வைக்கப்பட வேண்டும். இவற்றை மீறுவது அரசியல் சட்டம் பிரிவு 19-ஐ மீறுவதாகும்.


(6) ''கைதிகளை நீண்ட கால தனிமைச் சிறையில் வைத்து சமூகத்திலிருந்துத் தனிமைப்படுத்துவது குற்றம்; நியாய மான வழிமுறைகளுக்குப் பின்னரே இத்தகைய நடவடிக் கைக்கு ஒரு கைதி உள்ளாக்கப்படலாம். பிரிவு 29-ன் விசயங்களும், பத்ரா வழக்கில் சுட்டிக்காட்டப்பட்டு வரி சைப் படுத்தப்பட்டுள்ள விதிகள் இவ்விசயங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

(7) ''வேலை, ஊதியம், கண்ணியமாக நடத்துதல், சமூகத் தொடர்பு, திருத்தும் வழிமுறைகள் ஆகியவை தொடர் பான விசயங்களில், அரசு, ஐக்கிய நாடுகள் அவையால் சிபாரிசு செய்யப்பட்டுள்ள கைதிகளை நடத்துவதற்கான குறைந்த பட்ச நடத்தை விதிகளை கடைப்பிடிக்க நடவ டிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

(8) ''சிறைகள் சட்டம் புனரமைக்கப்பட்டு சிறை விதிகள் புத்தகம் அடியோடு மாற்றப்பட வேண்டும். கைதிகளை மாற்றியமைக்கும் நோக்கில் பார்த்தால் மாதிரி சிறைவிதி கள் புத்தகமே அந்த நோக்கத்திற்குப் பொருத்தமானதாக இல்லை. சிறை நிர்வாகிகளுக்கு சரிப்படுத்துதல் மற்றும் திசை வழி அளிக்கும் படியான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். அரசியல் சட்ட மதிப்பீடுகள், கைதிகளைத் திருத்தும் அணுகுமுறைகள், பதட்டமற்ற சமநிலையி லான நிர்வாகம் தொடர்பானதாக அப்பயிற்சிகள் அமை தல் வேண்டும்.

(9) ''நீதிமன்ற செயல் - அழைப்பாணை (writ) அதிகாரம் மற்றும் கண்டனங்கள் ஆகியவற்றின் மூலம் நீதிமன்றம் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்க முடியும்''.

பிரேம் சங்கர் சுக்லா X டெல்லி நிர்வாக வழக்கில் (1980 (3) SCC 526) கை விலங்கிடுதல் தொடர்பாக நீதிமன்றம் அளித்த தீர்ப்பாவது:



*''கை விலங்கிடுவது என்பது கொடூரமாக நடத்துவதும் அவமதிப்பான தண்டனையுமாகும். அரசியல் சட்டம் பிரிவுகள் 14, 19-லிருந்து கூறாமலே அறிய முடிவது என்னவென்றால் ஒருவரின் கைகளில் விலங்கிடுவது கட்டாயத் தேவையல்ல; இது வக்கிரமானது, தான்தோன்றித்தனமானது, சர்வாதிகாரமானது, அச்சுறுத்தி அவமதித்து அடி பணிய வைப்பதாகும். 19-வது பிரிவு வழங்கும் ஒரு கைதிக்கும் உள்ள உரிமையான குறைந்தபட்ச, நடமாட்ட சுதந்திரம் கைவிலங்கிடுவதன் மூலம் வெட்டிக் குறுக்கப்படக் கூடாது.*

*''அரசியல் சட்டப் பிரிவுகள் 14, 19-க்கு ஏற்ப, பாதுகாப்பை உத்திரவாதம் செய்ய வேறு பல வழிகள் இருப்பதால், கைவிலங்கிடுவதை கடைசி வழிமுறையாக மட்டுமே செய்ய வேண்டும். சிறை அதிகாரிகள் அல்லது வெளியில் பாதுகாப்*

புக்கு வருபவர்களின் வசதிக்காக எந்த ஒரு கைதியையும் கைவி லங்கிடுவதோ அல்லது சங்கிலியால் பிணைப்பதோ கூடாது.

''விலங்கிடுவதை தவிர வேறு மாற்று வழிகளில்லை என்ற நிலையை அடைவதற்கு முன்னர் வழமையான பல்வேறு பாது காப்பு முறைகளையே மேற்கொள்ள வேண்டும். போக்குவரத் தின் போது கைதி, போலீஸ் பாதுகாப்பை மீறி தப்பித்து விடு வார் என்ற அபாயம் தெளிவாக இருக்கும் போது, போலீசின் எண்ணிக்கையை அதிகரிப்பது, அல்லது பிற வழிகளை கையா ளுவதன் மூலமும் கட்டுப்படுத்த இயலாது என்பதற்கு உறுதி யான ஆதாரம் இருக்கும் போது மட்டுமே கை விலங்கிடலாம். இதைத் தெள்ளத் தெளிவாக நிரூபிக்கின்ற பொறுப்பு விலங்கி டுபவர்க்கே உள்ளது''.

''கடுமையான அல்லது பாரதூரமான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி இருப்பதாலோ, தப்பிக்கும் வாய்ப்பு உள்ளது அல் லது கைதி கட்டுக்கடங்காதவர் என்பதாலோ, இக்காரணங்களி னால் மட்டும் ஒருவர் கைவிலங்கு இடப்படுவது கூடாது''.

எனவே, ஒருவர் சிறைக்கு உள்ளே இருந்தாலும் சரி அல் லது வெளியே இருந்தாலும் சரி, இந்நாட்டில் ஒரு குடிமகன் வதைக்கப்படுவதற்கு அரசியல் சட்டப்படியும், சட்டப்படியும் வாய்ப்பு ஏதும் இல்லை என்பது தெளிவு.

இந்தியா பறக்க விடும் சர்வதேச பிரகடனங்கள்:

ஐக்கிய நாடுகள் அவையின் 1950-ஆம் ஆண்டு பிரகட னத்தை இந்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டு உள்ளது. அது தெளிவாக கூறுவதாவது;

''உயிர் வாழவும், சுதந்திரத்தை அனுபவிக்கவும், தனிப் பட்ட பாதுகாப்பு பெறவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

''எவரும் வதைக்கு உள்ளாக்கப்படுவதோ, இழிவாக நடத் தப்படுவதோ, அல்லது கொடுமையாக தண்டிக்கப்படுவதோ கூடாது.

''மனம் போனபடி எவரையும் கைது செய்வது, சிறையிலி டுவது அல்லது நாடு கடத்துவது கூடாது''.

வதைகளுக்கு உள்ளாகாமலிருப்பது, கொடூரமான மனிதா பிமானமற்ற மற்றும் இழிவாக நடத்தப்படுதல் அல்லது தண்ட னைகளிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான உரிமைகள் தொடர்பாக இந்திய அரசாங்கம் பல்வேறு சர்வதேச ஒப்பந்தங் களை ஏற்றுள்ளது.

1979-ல் இந்திய அரசாங்கம் குடியுரிமை மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தை ஏற்றது. இதன் 7-வது பிரிவு கொடூரவதை நடவடிக்கைகளையும், மனிதாபிமா னமற்று அல்லது இழிவாக நடத்தப்படுவதையும் தடுக்கிறது. இவ்வுரிமைகள் ''நாட்டின் வாழ்வையே அச்சுறுத்தும் அவசர நிலைகளின்'' போது கூட (பிரிவு 4) உத்திரவாதம் செய்யப்பட வேண்டும். ஜூன் 23, 1979-ல் வதைகளுக்கு எதிரான தனது சொந்த பிரகடனத்தை ஐக்கிய நாடுகள் அவைக்கு அளித்தது;

சர்வதேசப் பிரகடனத்தின் விதிகளுக்கு ஒப்புதல் அளித் தது. வதைகள் மற்றும் கொடூர தண்டனைகளுக்கு உட்படுவதி லிருந்து அனைவரையும் பாதுகாப்பதாக கூறியது. இத்தகைய விதிகளை உறுதிப்படுத்த சட்டமியற்றவும் பிற பலன் தரத்தக்க வழிகளை மேற்கொள்ளவும் உறுதியளித்தது. இருப்பினும் வதைக்களுக்கு உட்படுபவர்களுக்கு நட்ட ஈடு வழங்காமலிருப் பதற்கான உரிமையை இந்திய அரசாங்கம் தனது விருப்பப்படி யானதாக இருத்தி வைத்துக் கொண்டது. தனது சொந்த பிரகட னத்தில் இந்திய அரசாங்கம் கூறியிருப்பதாவது:

''இந்திய அரசாங்கம் தனது நோக்கங்களை பின்வருமாறு பிரகடனம் செய்கிறது:

- வதைகளுக்கும் கொடூரமாக, மனிதாபிமானமற்று இழிவாக நடத்தப்படுதலுக்கும் தண்டனைக்கும் எதிராக அனைவரையும் காத்து சர்வதேச பிரகடனத்திற்கு (பொதுச் சபை தீர்மானம் 3452 (XXX) annex); கட்டுப்படுகிறது.
- இத்தீர்மான நோக்கங்களை ஈடேற்ற சட்டங்களை இயற்றலும் பிற ஆக்கபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்.

''பிரகடனத்தின் 11-வது பிரிவில் வதைகளுக்கு இலக்கானவர்களுக்கு அரசு நட்ட ஈடு வழங்குவது பற்றிய 11-வது பிரிவு இதை வலியுறுத்துகிறது — விஷயத்தில் அரசு அதிகாரிகளால் வதைக்கப்படும் சந்தர்ப்பங்களில் அப்படி வழங்காமலிருப்பதற்கான உரிமையை மட்டும் இந்திய அரசாங்கம் மேலும் பிரகடனம் செய்கிறது''.

ஐக்கிய நாடுகள் அவையின் பிற உறுப்பினர்களை வதைகள் தொடர்பாக இத்தகைய பிரகடனங்களை ஏற்கும்படி இந்திய அரசாங்கம் அடுத்தடுத்து வற்புறுத்தியது. இவை ''தனது குடிமக்கள் சார்பாக அரசாங்கம் அளிக்கும் வாக்குறுதி'' என்றும் ''தமது உரிமைகள் மீறப்படும் போதெல்லாம் அவ்வுரிமைகளைக் கோருவதற்கு குடிமக்களுக்கு ஓர் உத்திரவாதம்'' என்றும் 1979-ல் தனது பிரதிநிதி வாயிலாக வலியுறுத்தியது.

இந்தியா மிகச் சிறந்த அரசியல் சட்டத்தை கொண்டிருந்த போதிலும் இந்திய அரசாங்கம் ஐ.நா. பிரகடனங்களையும் ஒப்பந்தங்களையும் ஏற்றுக் கொண்ட போதிலும் மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுவது என்பது தொடர்ந்து கொண்டு இருக்கிறது. விடியலின் ஒளிக் கீற்று கூட தென்படக் காணோம்.

வில் துராந்த் கூறியது போல நாகரீகத்தை போற்றி வளர்க்க விரும்புபவர்கள் இப்பொழுதே செயலாற்ற முன்வருவது அவசரமான கடமையாகும்.

■ ■ ■

## தமிழகம்: வாழும் உரிமையையும் பறிக்கும் 'ஜெ' ஆட்சி!

### போலீசின் கொட்டடிக் கொலைகள்


● *1992*-ல் பழைய இரும்பு வியாபாரி ராவுத்தரை சைக்கிள் திருட்டு வழக்கில் சந்தேகம் என இழுத்துச் சென்ற குமரி மாவட்டம் தக்கலை போலீசு அடித்துக் கொன்றது. கைலியில் ராவுத்தர் தூக்குப் போட்டுக் கொண்டதாக வழக்கை ஜோடித்தது.

● *1992*-ல் ஒட்டன் சத்திரத்தில் ஒரு நிலச்சுவான்தார் வீட்டு நகை களவு போனது தொடர்பாக தோட்டக்காரர் முத்துசாமியை குற்றத்தை ஒப்புக்கொள்ளச் சொல்லியது போலீசு. அவரது மனைவியையும், மகளையும் அவர் கண்முன்னே நிர்வாணப்படுத்தி அவரை துடிதுடிக்க அடித்துக் கொன்றது. பின்னர் வயிற்று வலியால் இறந்து போனதாக வழக்கை முடித்தது.

● *1992*-ல் மேட்டூர் அணை மதுவிலக்குப் பிரிவு எஸ்.ஐ. சுருளிவேல் தான் தங்கயிருந்த வீட்டுக்காரரின் மனைவியுடன் கள்ள உறவு கொண்டான். இதைத் தட்டிக் கேட்ட கணவர் (ஆசிரியர்) பெருமாள் என்பவரை அவர் வீட்டில் தனியாக இருந்த போது கொலை செய்து விட்டு தற்கொலை என ஜோடனை செய்தான்.

● சென்னை பேசின் பிரிட்ஜ் பகுதி ரவுடி பிரகாசு செய்யாத குற்றத்தை ஒப்புக் கொள்ள மறுத்ததால் *1992*-ல் அடித்தே கொல்லப்பட்டான். பாலத்துக்கடியில் பிணத்தைப் போட்டு அங்கு தற்கொலை செய்து கொண்டதாக போலீசு கூறியது. இதை எதிர்த்த பகுதி மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி இருவரைக் கொன்றது.

● *1992*-ல் திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், சாத்தனூர் கிராமத்தைச் சேர்ந்த சேட்டு என்பவர் தனது அண்ணன் மகன் மீது சைக்கிளை ஏற்றியதுடன், தனது




அண்ணனையும் நடு ரோட்டில் வைத்து அடித்த ரிசர்வ் போலீ சுக்காரன் பூமிநாதனைத் தட்டிக் கேட்டதால், போலீசு நிலையத் துக்கு இழுத்துச் செல்லப்பட்டு தாக்கப்பட்டார். இதனால் பின் னர் மருத்துவ மனையில் உயிரிழந்தார்.

● முதுகுளத்தூர், ஏர்வாடி கிராமத்தில் திருட்டு வழக்கு தொடர்பாக விசாரணைக்கு என்று அழைத்துச் சென்ற போலீசார், முத்துசாமி என்பவரை குற்றத்தை ஒப்புக் கொள்ளச் செய்ய அடித்தே கொன்றனர். ஆனால் அவர் தற்கொலை செய்து கொண்டதாக புளுகினர். அதற்கு ஆதாரமாக, அவரது மனை வியை மிரட்டி தற்கொலை என எழுதி வாங்கினர். இதைக் கண்டித்து 17-7-92-ல் நடந்த சர்வ கட்சி பொதுக் கூட்டத்தில் என் கட்சிக் காரனையே இப்படிச் செய்யலாமா என அ.தி.மு.க. வினர் புலம்பினர்.

● 1992-ல் குத்தாலம் போலீசு, கலிய பெருமாள் என்பவரை திருட்டு வழக்கில் விசாரணைக்காக அழைத்துச் சென்று வதைத்துக் கொன்றது. அவர் தற்கொலை செய்து கொண்டதாக வழக்கை ஜோடித்தது. இவர் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர். இக்கட்சியினர் தொடர்ந்து போராடியதன் பின் சில போலீசார் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

● சுப்பையா ஒரு வியாபாரி. கேடிகள் சிலர், அவர் தங்களிடம் திருட்டுப் பொருட்கள் வாங்கியதாக கூறினர். இது தொடர்பாக நெல்லை மாவட்டம், சீவலப் பேரி மற்றும் அம்பாசமுத்திரம் போலீசார் சுப்பையாவை இழுத்துச் சென்று தாக்கிக் கொன்றனர், தான் தெரியாமல் வாங்கியதாகக் கூறி, வாங்கியப் பொருட்களை ஒப்படைத்த பின்னும் நகக் கண்களில் ஊசியேற்றப்பட்டதாலும், அவரது ஆணுறுப்பைத் தாக்கி கொடுமைப்படுத்தியதாலும், இறந்து போனார். 1993-ல் இது நடந்தது.

● வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், ஆற்காடு போலீசு, திருமண வீடு ஒன்றில் காமிரா திருடு போனது தொடர்பாக, ஆற்காடு நகரைச் சேர்ந்த பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் சரவணனை, சந்தேகத்தின் பேரில் கைது செய்து, விசாரணை என்ற பெயரில் உதைத்துக் கொன்றது. பாட்டாளி மக்கள் கட்சி இதை எதிர்த்து கடையடைப்பு கூட நடத்தியது. 1993-லேயே இதுவும் நடந்தது.

● வில்சன் தனது நண்பர்களுடன் குடித்து விட்டு கலாட்டா செய்து கொண்டிருந்தார். தகவலறிந்து வந்த சென்னை, ராயப்பேட்டை போலீசார், தனியாக சிக்கிய அவரை வீதியில் ஓட ஓட விரட்டினர்; லத்தியாலும் இரும்புக் கம்பியாலும் தாக்கினர்; மயங்கி விழுந்தவரை நாயைப் போல், நடு ரோட்டிலேயே தரதரவென இழுத்துச் செல்லப்பட்டதால் இறந்து போனார். நூற்றுக்கணக்கானவர்களின் கண்ணெதிரிலேயே இது நடந்தது. இதுவும் 1993-ல் தான் நடந்தது.

● ராஜாராம் ஒரு சிறு சாராய வியாபாரி. போலீசு மீண்டும் கூடுதலாக மாமூல் தரும்படி கேட்க, கூடுதலான அளவில் மாமூல் தராததால் பல்லாவரம் போலீசால் அடித்தே கொல்லப் பட்டார். போலீசு நிலையக் கிணற்றில் விழுந்து இறந்து போன தாக வழக்கைப் பதிவு செய்தனர் போலீசார். இவ்வாறு அக்கி ணற்றில் ஏற்கனவே 5 பேர் இறந்து போனதாக போலீசு கணக்கு உள்ளது. இதை எதிர்த்துக் கேட்ட இளைஞர்கள் மீது போலீசு தாக்குதல் நடத்தியதில் ஒரு பஸ் டிரைவர் இறந்து போனார். இது 1993-ல் நிகழ்ந்தது.

● மாரிமுத்து ஒரு முன்னாள் சாராய வியாபாரி. சாராயம் விற்பதை நிறுத்தி விட்டு வேறு தொழில் செய்தார். மாமூல் நின்று போனதால் ஆத்திரமுற்ற மதுரை, அவனியாபுரம் போலீசு 5-10-93 அன்று கைது செய்து அடித்துக் கொன்றது. மக்களின் சாலை மறியலுக்குப் பின்னரும் பெரிதாக ஏதும் நடந்து விடவில்லை.

● நவம்பர் 92-ல் வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், — கலவை — நடேசன் என்பவர் குடும்பத் தகராறு பற்றிய புகாரின் பேரில் கலவை போலீசால் இழுத்துச் செல்லப்பட்டு, தாக்கப் பட்டு மரணமடைந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த கிராமமே போலீசால் சூறையாடப்பட்டு 43 பேர் மீது வழக்கு தொடுக்கப் பட்டது.

● மார்ச் 93-ல் தென்னாற்காடு மாவட்டம் கோபாலபுரத்தைச் சேர்ந்த ராஜாக் கண்ணு, திருட்டு வழக்கு சம்மந்தமாக கம்மாபு ரம் போலீசால் இழுத்துச் செல்லப்பட்டார். அவரை அடித்துக் கொன்று நெடுஞ்சாலையில் பிணத்தை வீசிய போலீசார், அவர் ''தப்பி ஓடி'' விட்டதாகப் புளுகி, பின்னர் அம்பலப்பட்டனர்.

● குள்ளஞ் சாவடி போலீசு 1992-ல் விருப்பலிங்கம் என்ற இளைஞர், தொடர்ந்து கள்ளச் சாராயப் பேர் வழிகளுக்கு எதிரா கப் போராடியதால், தமக்கு இடையூறாக இருப்பதாக கருதிய

போலீசார் இழுத்துச் சென்று சாகடித்தனர். இதே நிலையத்தில் 1993-ல் திருட்டு வழக்கு தொடர்பாக செல்வம் என்பவரை அடித்துக் கொன்றனர்.

● 1994 தொடக்கத்தில், தர்மபுரி மாவட்டம் ஓசூரில் திருட்டு வழக்கில் தேடப்பட்ட 14 வயது சிறுவனை பெற்றோரே போலீசிடம் ஒப்படைத்தனர். அவனை அடித்துக் கொன்று, ஒகேனக்கல் காட்டுக்கு கொண்டு போய் கொளுத்தி விட்டுத் தப்பியோடி விட்டான் என்று போலீசு புளுகியது. ஆனால் போலீசின் கொலைதான் என்பதற்கு ஆதாரங்கள் சிக்கின.

● ஜூன் 94-ல் விசாரணைக்காக அழைத்துச் சென்ற அந்தோணிசாமியை வேனிலேயே அடித்துத் தீர்த்து கட்டியது உளுந்தூர் பேட்டை போலீசு. ஆத்திரமுற்ற மக்கள் காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர்.



● ஜூன் 1994-ல், சென்னை - மயிலாப் பூர் - 13 வயதே ஆன சிறுவன் சதீஷ்கு மாரை திருட்டு வழக்கில் சந்தேகம் என அழைத்துச் சென்ற போலீசு, இரண்டு நாட்கள் சட்டவிரோதக் காவலில் வைத்து வதை செய்தே கொன்றது. இதை எதிர்த்த பகுதி மக்கள் சாலை மறியல் செய்தனர். அதன் பின்னரே இதில் தொடர்புடைய போலீசார் தற்கா லிக வேலை நீக்கம் செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டது.



## போலீசின் பாலியல் பலாத்காரங்கள்

● சிதம்பரம் - அண்ணாமலை நகர் பத்மினி இவரது கணவர், நந்த குமார், 29-5-92 முதல் திருட்டு வழக்கு தொடர்பாக போலீசு காவலில் வைக்கப்பட்டிருந்தார். அவருக்கு உணவு எடுத்துச் சென்ற பத்மினியை அவரது கணவர் எதிரிலேயே போலீசு நாய்கள் பாலியல் பலாத்காரம் செய்தன. எதிர்த்துக் கேட்ட நந்த குமாரை அடித்தே கொன்றன. பல்வேறு மகளிர் அமைப்புகள், கட்சிகள், அமைப்புகளின் தொடர்ச்சியான போராட்டங்களின் விளைவாக போலீசார் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு வழக்கு தொடுக்கப்பட்டது.

● விஜயா - செஞ்சியை அடுத்த அத்தியூரைச் சேர்ந்த பழங்குடி இனப் பெண். குற்றம் சாட்டப்பட்ட அவரது உறவினரை அடை யாளம் காட்டுவதற்காக நிர்ப்பந்தித்து அழைத்துச் சென்ற அனந் தபுரம் மற்றும் புதுவைப் போலீசு ''நாய்கள்'' ஐந்து பேர் அவரை குற்றம் சாட்டப்பட்டவரின் கொல்லையில் வைத்து பாலியல் பலாத்காரம் செய்தன. குற்றம் செய்தவர்கள் மீது நடவடிக்கை ஏதும் குறிப்பிடத்தக்கவாறு இல்லை. 1993-ல் இது நடந்தது.

● தங்கம்மாள் - சேலம் மாவட்டம் தலைவாசலை அடுத்த ஊனத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர். சாதாரண கேடியான அவரது கணவரை கொலை வழக்கு தொடர்பாக தேடிச் சென்ற போலீசார் கணவர் இல்லாததால் ம்னைவியை இழுத்து வந்தனர்.காவல் நிலையத்தில் வைத்து மூன்று போலீசு ''நாய்கள்'' பாலியல் பலாத்காரம் செய்தன. இதைக் கேள்விப்பட்டு காவல் நிலையத்துக்கு வந்த கணவரை குற்றத்தை ஒப்புக் கொள்ளச் செய்ய வதைத்தனர். அவர்தான் கொலை செய்தார், மனைவி சாட்சி என்று ஒப்புக் கொள்ள வைத்தது போலீசு. ஆத்தூர் நீதி மன்றத்தில் அவர்கள் இருவரும் இதைக் கூறிய போது 'நீதிபதி' கண்டு கொள்ளவே இல்லை. இது 1993-ல் நடந்தது.

● சாத்தூர் நீதி மன்ற வளாகத்தில் கற்பகவல்லி என்ற பெண் நீதிபதியின் கையாட்கள் இருவரால் 31-8-93 அன்று பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டாள். பொதுமக்களும் வழக்கறிஞர்களும் போராடியும் பலன் ஏதுமில்லை. ஆனால் அப்பெண் நீதிபதியின் கையாட்களை விபச்சாரத்துக்கு அழைத்ததாக பொய் வழக்கு போட்டது போலீசு.

● 1993-ல் சாராய வழக்கு ஒன்று தொடர்பாக கணவன் இல்லாததால் ரெங்கம்மாள் என்ற பெண்ணை இழுத்துச் சென்ற தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு போலீசு நாய்கள் காவல் நிலையத்தில் வைத்து பலமுறை பாலியல் பலாத்காரம் செய்தன. மனைவிக்கு நேர்ந்த கொடுமையால் கணவர் தற்கொலை செய்து கொண்டார். இதன் பின்னரே விஷயம் வெளியானது. போலீசார் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு வழக்கு தொடுக்கப்பட்டது.

● மே, 1994-ல் முத்தாண்டிக் குப்பம் வசந்தா, பொருந்தா திருமணத்தை மீறி தனது காதலனுடன் வாழ்ந்தார். கிழட்டுக் கணவர் கொடுத்த புகாரின் பேரில் வசந்தா கைது செய்யப்பட்டார். கும்பல் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளான அவர் இறந்து போனார். வசந்தா தற்கொலை செய்து கொண்டதாக

பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது. விஷயம் அம்பலமானதும் ஐந்து போலீசு நாய்கள் தலைமறைவாகப் போயின. மகளிர் அமைப்பினரின் ஆர்ப்பாட்டங்கள், பிற நிர்ப்பந்தங்களைத் தொடர்ந்து ஜூன் இறுதியில் 'தலைமறைவாக' இருந்த போலீசாரைக் கைது செய்தது சூரப்புலி தமிழ்நாடு போலீசு.

● மாயவரம் - மணல்மேடு: மகன் திருடன் என்று தேடி வந்த போலீசார் தந்தை அப்பா பிள்ளை, தாய், சகோதரி என மூவரையும் ஜூன் 94-ல் இழுத்துச் சென்றனர். மூவரையும் இரண்டு நாட்கள் வதைத்தனர். தாயையும் மகளையும் கும்பல் பாலியல் பலாத்காரம் செய்தனர். பின்னர் வீட்டுக்கு வந்த மூவரும் மீண்டும் போலீசு வதைக்கும் அவமானப்படுத்தும் என்று அஞ்சி, அவர்களும் மற்றும் மூன்று குழந்தைகளும் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டனர்.

● இந்திரா காந்தி - இவர் திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டத்தைச் சேர்ந்தவர். இவரது உறவினர் முத்துராஜ் மதுரை கோம்பையைச் சேர்ந்தவர். இவர்கள் குற்றாலம் சென்று விட்டு மதுரை பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காக காத்திருந்தனர். இரு போலீசார் முத்துராஜை அடித்து விரட்டிவிட்டு பெண்ணை ஆட்டோவில் கடத்திச் சென்று 'லாட்ஜ்'ஜில் வைத்து பாலியல் பலாத்காரம் செய்தனர். இப்போது தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. ஜூலை 94-ல் இது நடந்தது.

● தமிழ்நாட்டில் ஒரு பெண் முதலமைச்சராக உள்ளதால் கற்பழிப்பு போன்ற கொடூரமான விவகாரங்களில் கடுமையான நடவடிக்கை எடுப்பார் என்று யாராவது நம்பினால் அவர்கள் பைத்தியக்காரர்களாகத்தான் இருக்க வேண்டும். அண்ணாமலை நகர் பத்மினி கற்பழிப்பு குறித்து தமிழ்நாடு முழுவதும் விசாரணை - நீதி கோரிப் போராட்டங்கள் வெடித்த போதும் எருமைமாட்டின் மீது மழைபெய்ததைப்போல இருந்தார், ஜெயா. சினிமாவில் அபலைப் பெண்கள் கற்பழிக்கப்படுவ

தைக் கண்டுரசிக்கும் வில்லியின் நினைவுதான் வருகிறது. இப்போது ஓரத்தநாடு ''காவல் நிலைய''க் கற்பழிப்புகள் சட்டமன்றத்தில் எழுப்பப்பட்டது; அதற்கு, ''எல்லா கற்பழிப்புப் புகார்களையும் நம்பமுடியாது; குற்றங்களுக்காகப்பிடித்துச் சென்று, விடுவிக்கப்பட்ட பெண்கள் பலரும் வழக்குகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக தாம் கற்பழிக்கப்பட்டதாகப் பொய் சொல்கிறார்கள்'' என்று போலீசு மிருகங்களுக்குப் பொது வக்காலத்து வாங்கியிருக்கிறார். தமிழ்நாடு போலீசு தியாகமிகு சேவை செய்வதாகப் பாராட்டுவதோடு ஏராளமான விருதுகள், சலுகைகள், வசதிகள் அள்ளித்தருகிறார். சினிமா, பத்திரிக்கைகளில் போலீசைக் குறைகூறக்கூடாதென்று கடும்கண்டனம் தெரிவிக்கிறார். சுருக்கமாகச் சொன்னால், விசுவாசநாய்களுக்கு மாட்டுக்கறி போட்டு வளர்ப்பார்கள். ஆனால் போலீசுக்கு மனிதக்கறிபோட்டு வளர்க்கிறார், ஜெயலலிதா.



பத்திரிக்கையாளர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகளின் அம்பலப்படுத்தல்கள், நீதி மன்றத் தலையீடுகள் ஆகியவை அடுத்தடுத்து செய்யப்பட்ட போதும், இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும், வதைகள் எங்கும் விரவியதாகவும் அன்றாட வழமையானதாகவும் உள்ளன; போலீசு, அரை - இராணுவம் அல்லது இராணுவம் என யார் கைது செய்தாலும் இதுதான் நடைபெறுகிறது. ஆட்சியில் உள்ள கட்சியின் அரசியல் கொள்கை எதுவாக இருந்தாலும் நடப்பது என்னவோ இதே கதைதான். இவற்றை அங்கீகரிக்க அரசாங்கம் விடாப்பிடியாக மறுப்பது, இந்தியா முழுவதிலும் இந்தநடைமுறை உறுதிப்படுத்தப் பட்டு தங்கு தடையின்றி தொடர்வதற்கே உதவுகிறது.

